Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 20 திங்கட்கிழமை (05.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :283

# செப். 30 ஆம் திகதி யாழில் தமிழர் அரசுப் பிரகடனம்!

யாழ்ப்பாணம்,செப்.5

வடக்கு - கிழக்கிலுள்ள தமிழர் அரசை அங்கீகரிக்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரும் பிரகடனம் ஒன்று வெளியிடப்பட வுள்ளது.

இந்தப் பிரகடனம் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் இடம்பெறவுள்ள 'பொங்கு தமிழ் 2005' மாபெரும் எழுச்சி நிகழ்வில் வெளியிடப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை யாழ் பல்கலைக் கழக சமூகம் பெரும் எடுப்பில் மேற்கொண்டு வருகிறது. இந்நிகழ்வு தொடர்பாக பத்தி ரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப் பொன்று நேற்று மாலை திருநெல்வேலியி லுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றி யத் தலைவர் எஸ்.விஜயரூபன் தலைமை யில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளு மன்ற உறுப்பினர்களான எஸ்.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், சுரேஷ் பிரே மச்சந்திரன், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிதம்பரநாதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், 'பொங்கு தமிழ் - 2005' நிகழ்வு ஏற்பாட்டுக் குழுவின் ஊடக இணைப்பாளர் கலாராஜ் மற்றும் ஏற்பாட் டுக் குழுவைச் சேர்ந்த எஸ்.அருந்தவபாலன் ஆகியோர் கலந்துகொண்டு பத்திரிகையா ளர்களுக்கு விளக்கமளித்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நாவை ஈடுபடுத்தும் முயற்சி: ஐ.தே. கட்சி கடும் ஆட்சேபம்!

## கோபி அனானின் பிரதிநிதியிடம் நேரில் தெரிவிப்பாராம் ரணில்

கொழும்பு,செப்ரெம்பர்5

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையை ஈடுபடுத்துவ தற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்திருக்கிறார் என வெளியான செய்தி கள், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்குக் கடும் எரிச் சலையும் விசனத்தையும் தந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த முயற்சியை ஆட்சேபிக்கவும், இத்தகைய திட்டத்துக்கு எதிரான தமது நிலைப் பாட்டை இலங்கைக்கு தற்போது விஜயம் செய்திருக்கும் - ஐ.நா. செயலாளர் நாயகத் தின் பிரதிநிதியான பிரேஷ்மியிடம் நேரில் தெரிவிக்கவும் ஐக்கிய தேசியக் கட்சி தீர் மானித்திருப்பதாகவும் அறியவருகின்றது

இன்னும் பத்து வாரங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியிலிருந்து வெளி யேறப்போகின்ற ஜனாதிபதி குமாரதுங்க அதற்கு முன்னர் இலங்கை விவகாரத்துக் குள் ஐ.நாவை இழுத்துவிட முடிவு செய்தி ருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் யுத்தநிறுத்தத்தைக் கண் காணிக்கும் கண்காணிப்புக் குழுவுக்குப் பதி லாக ஐ.நா. அமைதிப்படையைக் கொண்டு வந்து இங்கு நிலைநிறுத்தவும் -

இலங்கை சமாதான முயற்சிகளில் அனு சரணைப் பணி வகிக்கும் நோர்வேயை ஓரம் கட்டிவிட்டு அந்தப் பொறுப்பில் ஐ.நாவை இழுத்துவிடவும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலரின் ஆலோசகருடன் நாளை கூட்டமைப்பினர் சந்திப்பு

கொழும்பு,செப்.5

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளர் கோபி அனானின் ஆலோசகரைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளை சந்திக்கவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐ.நா. பொதுச் செயலருக்கு விடுத்த அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள ஐ.நாவின் விசேட

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 3 படையினர் காயம்!

மட்டக்களப்பு,செப்.5

மட்டக்களப்பில் நேற்று மாலை இடம் பெற்ற இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவரின் நிலை மோசமாக இருந்தது.

மாலை 6.00 மணியளவில் சந்திவெளி, சித்தாண்டி ஆகிய இடங்களில் இந்தச் சம்ப வங்கள் இடம்பெற்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)





நிதர்சனம் மகளிர் போராளிகளின் தயாரிப் பில் உருவான 'ஈரத்தீ' முழு நீளத் திரைப் படத்தை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நேற்று வெளியிட்டு வைக்க, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்தில் காணலாம். நிதர்சனப் பிரிவுப் போராளியும் தமிழீழ நுண்கலைக் கல்லூரி மாணவியுமான புகழினியின் பரத நிருத்திய அரங்கேற்றத்தில் தேசியத் தலைவர் கலந்துகொண்டபோது அவ ருடன் எடுக்கப்பட்ட படத்தை இரண்டாவ தாகக் காணலாம்.

## புலிகளின் அலுவலகம் மீது களுவாஞ்சிக்குடியில் தாக்குதல்!

### போராளி ஒருவர் பலி; நேற்றுக்காலை சம்பவம்

ஏறாவூர், செப்.05

தமிழீழ விடுதலைப் புலிகளின் களுவாஞ்சிக்குடி பிரதேச அரசியல்துறை பணிமனை இனந்தெரியாத நபர்களால் நேற்றுக்காலை திடீர் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் இந்தத் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச் சென்றனர் எனக் களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. கே.அருள்நேசன் (வயது-19) என்ற புலிகள் இயக்கப் போராளி ஒருவரே இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானின் உயிருக்கு அச்சுறுத்தல் சந்தேகத்தில் தமிழர்கள் சிலர் கைது!

### 'மின்னல்' நிகழ்ச்சியில் யோகராஜன் தகவல்

கொழும்பு, செப்.5

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட் சித் தலைவரும் எம்.பியுமான ஆறுமுகன் தொண்டமானின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தகவல் வெளியிட்டிருக் கின்றார் இ.தொ.கா. உபதலைவரான இரா. யோகராஜன்.

நேற்று மாலை 'சக்தி' தொலைக் காட்சி யில் ரங்கா நடத்திய 'மின்னல்' நிகழ்ச்சியில் ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி யான தி.மகேஸ்வரனுடன் கலந்துகொண்டு விவாதம் செய்த சமயமே இத்தகவலை வெளி யிட்டார் யோகராஜன்.

விசேட அதிரடிப்படையினரின் ஜீப்புகள், பஜரோக்கள் சூழ ஒன்பது வாகனங்களில்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஒப்பந்தங்களைச் செய்ய சுபநேரம் கணிக்கிறார் பிரதமர்

கொழும்பு,செப்.5

ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்காக சுபநேரம் ஒன்றைக் கணித்துக் கூறுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனக்கு நெருக்கமான சோதிடர்களிடம் கேட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிப்பதற்கு ஜே. வி. பி. தீர்மானித்துள்ளது. ஆனால், தனி வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்தப்போவதாகக் கூறியிருக்கும் ஜாதிக ஹெல உறுமய, இறுதி நேரத்தில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவை வழங்குமென நம்பிக்கையாகத் தெரிகிறது.

இவ்வாறான பின்னணியில் இரு கட்சிகளுடனும் தனித்தனியே தேர்தல் ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதற்காக சுப வேளைகளைக் கணித்துத் தருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தென்னிலங்கையைச் சேர்ந்த பிரபல சோதிடரொருவரைக் கோரியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இம்மாத இறுதிக்குள் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகுமென பிரதமர் அலுவலக வட்டாரங்கள் கூறின. (எ-க)



தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய வருடாந்த கொடியேற்ற நிகழ்வு நேற்று இடம்பெற்றது. உற்சவத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் ஆலய முன்றிலில் திரண்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம் : நேசன்)

# கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரியில் மீண்டும் உள்ளக நோயாளர் பிரிவு

கைதடியில் உள்ள அரசினர் சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் உள்ளக நோயாளர் பிரிவு(வார்ட்) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது இந்த வைத்தியசாலை பலத்த சேதம் அடைந்ததைத் தொடர்ந்து மூடப்பட்டது. பின்னர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு இயங்க ஆரம்பித்த போதிலும் உள்ளக நோயாளர் பிரிவு ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது உள்ளக நோயாளர் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பிரிவில் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். (எ-173)

# தேர்தலுக்குமுன் நிரந்தர நியமனம் இல்லையேல் எதிர்ப்புப் போராட்டம்

## பட்டதாரிப் பயிலுநர்கள் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு,செப்.5

அரசதுறைகளில் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிகளை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிரந்தரமாக்காவிட்டால் அரசுக்கு எதிராக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தப்போவதாக பட்டதாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அவர்களைச் சமரசப்படுத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்படி சங்கத்தின் தலைவர்களை அலரி மாளிகைக்கு இன்று பேச வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளுக்கு அமைய 19 ஆயிரத்து 806 பட்டதாரிகள் பயிலுநர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். எனினும், அவர்களில் சில நூற்றுக்கணக்கானவர்கள் மட்டுமே இதுவரை நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் தொடர்ந்தும் நிரந்தரமற்ற ஊழியர்களாகவே இருந்து வருகின்றார்கள். அவர்களை நிரந்தர ஊழியர்களாக்குவோம் என்று கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் கொழும்பு சுகததாஸ அரங்கில் வைத்து பட்டதாரிகள் முன்னிலையிலேயே உறுதியளித்தார் ஜனாதிபதி. அந்த உறுதி மொழி நடைமுறைக்கு வராததைக் கடுமையாகக் கண்டித்துள்ள பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சந்தன சூரியாராச்சி, இன்று பிரதமருடன் நடைபெறும் பேச்சுகளிலும் தமக்கு நம்பிக்கையில்லை என்று தெரிவித்துள்ளார்.(எ-க)

# கருத்தரங்கு

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவினரால் வேலணை பிரதே சபைப் பிரிவில் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன என பிரதேச சபையின் செயலாளர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு உப அலுவலகத்திலும் -

எதிர்வரும் 13ஆம் , 14ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு வேலணை,மண்டைதீவு, அல்லைப்பிட்டி உப அலுவலகத்திலும்-

எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு நயினாதீவு உப அலுவலகத்திலும் இக்கருத்தரங்குகள் நடைபெறும் என்று செயலாளர் அறிவித்துள்ளார்.(எ-204)

# வளர்ப்பு நாய்களுக்கு நோய்த் தடுப்பு ஊசி

வலி.தென்மேற்கு,செப்.5

சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்றும் நாளையும் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதன் பிரகாரம் இன்று காலை 9 மணி முதல் 10.30 மணிவரை சுழிபுரம் மேற்கு கலைமகள் சனசமூக நிலையத்திலும் காலை 10.30 மணி முதல் 12 மணி வரை சுழிபுரம் மேற்கு பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்திலும் 12.30 மணி முதல் 2 மணி வரை சுழிபுரம் மத்தி நாவலர் சனசமூக நிலையத்திலும் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணிவரை மூளாய் இந்து இளைஞர் மன்றத்திலும், 10.30 மணி முதல் 12 மணி வரை தொல்புரம் மேற்கு டச் வீதி செல்வா சனசமூக நிலையத்திலும், 12.30 மணி முதல் 2 மணிவரை மூளாய் வாணி நிகேதன் சனசமூக நிலையத்திலும் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதென சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதகர் ஜி.கருணாநிதி தெரிவித்தார். (எ-135)





நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு 'புலிகளின் குரல்' நிறுவனம் நடத்திய கேணல் கிட்டு, லெப்.கேணல் திலீபன் ஞாபகார்த்த சிறப்பு முத்தமிழ் கலையரங்கில் நேற்றிரவு நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் ஈழத்தின் முன்னணிப் பாடகர்கள் எழுச்சிப் பாடல்கள் பாடுவதையும் அங்கு திரண்டிருந்த பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீரதன்)

# சிறுவர் உரிமை குறித்து பயிற்சிப் பட்டறை

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினரால் 'சிறுவர் உரிமைகள்' எனும் தலைப்பிலான ஒன்றரை நாள் பயிற்சிப் பட்டறையினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எழுவைதீவு, அனலைதீவு,காரைநகர் தெற்கு, காரைநகர் வடக்கு ஆகிய பிரதேசங்களிலேயே மேற்படி பயிற்சிப்பட்டறைகள் நடைபெறவுள்ளன.

பயிற்சிப்பட்டறை ஒன்றிற்கு உள்ளூர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நாற்பது பேர் அழைக்கப்படுவர். இவர்களுக்கு பங்குபற்றுநர் கொடுப்பனவு ,மதிய உணவு, சிற்றுண்டிகள் என்பன வழங்கப்படும்.

இந்தப் பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 7ஆம், 8ஆம் திகதிகளில் பிரதேச சபையின் எழுவைதீவு உப அலுவலகத்திலும் -

13ஆம், 14ஆம் திகதிகளில் பிரதேச சபையின் அனலைதீவு உப அலுவலகத்திலும் -

19ஆம் 20ஆம் திகதிகளில் பிரதேச சபையின் காரைநகர் தெற்கு உப அலுவலகத்திலும் 26ஆம், 27ஆம் திகதிகளில் பிரதேச சபை காரைநகர் வடக்கு உப அலுவலகத்தி லும் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளர் தெரிவித்தார். (எ-16)

# பயணிகளை ஏற்றிச் சென்ற மினிபஸ் பண்ணைக் கடலினுள் பாய்ந்தது

## 'றொட்' உடைந்தமையே காரணமாம்

யாழ்ப்பாணம்,செப்.5

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மினிபஸ் ஒன்று மண்டைதீவுக்கும் - அல்லைப்பிட்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் கடலில் பாய்ந்து சரிந்ததில் அதில் பயணம் செய்த மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 25 பயணிகளை ஏற்றிக்கொண்டு ஊர்காவற்றுறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்த மினிபஸ், மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடைப்பட்ட இலந்தையடிப் பகுதியில் கடலினுள் பாய்ந்து சரிந்தது.

மினிபஸ்ஸினுள் கடல் நீர் உட்புகுந்ததை அடுத்து பயணிகள் அவலக்குரல் எழுப்பியவாறு மினிபஸ்ஸின் ஜன்னல்கள் வழியாக கரைக்கு வந்து சேர்ந்தனர்.

இச்சம்பவத்தின்போது உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. எனினும் வேலணைத் துறையைச் சேர்ந்த 43 வயதுடைய ஏ.ஜீவராசா, உடுப்பிட்டியைச் சேர்ந்த 53 வயதுடைய எஸ்.முத்துராசா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 20 வயதுடைய நிருசன் ஆகிய மூவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். மினிபஸ்ஸின் 'றொட்' உடைந்தமையே இந்த விபரீதம் ஏற்படக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த மினிபஸ் நேற்று மாலை வரை கடலில் இருந்து மீட்கப்படவில்லை. (எ-7)

படம் : பிரபா



# கட்டாக்காலி நாய்களை அழிக்க பொதுமக்கள் ஒத்துழைப்பதில்லை

## ஊர்காவற்றுறை சுகாதாரப் பரிசோதகர் கவலை

ஊர்காவற்றுறை,செப்.5

ஊர்காவற்றுறைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்கள்பூரண ஒத்துழைப்பு வழங்குவதில்லையென சுகாதாரப் பகுதியினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு வேண்டப்படுகின்றனர்.

எனினும், பொதுமக்கள் அவ்வாறு செயற்பட முன்வாரத காரணத்தினால் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஊழியர்கள் வீதிகளில் வைத்து நாய்களைப் பிடிக்கின்றபோது பொதுமக்கள் அவர்களுடன் முரண்படும் சம்பவங்கள் ஏற்படுகின்றன என்று ஊர்காவற்றுறை பொது சுகாதாரப் பரிசோதகர் எஸ். கார்த்தீபன் கவலை தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும் என்றும் - அவர் கூறினார்.

அண்மையில் ஊர்காவற்றுறைப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் [illegible] விக்கப்பட்டது. (எ-16)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் -- 222 2030, 222 2083, 222 3837.

# அரசியலில் எதையும் சாதிக்காமல் வெளியேறும் ஜனாதிபதி சந்திரிகா

'நாயி சாகப்போகின்றது என்று தெரிந்ததும் அதிலிருக்கும் உண்ணிகள் தாமாகவே கழன்று விடும்' - என்பார்கள்.

'மூழ்கும் கப்பலில் இருக்கும் எலிகள் அதிலிருந்து பாய்ந்து, மிதக்கும் கப்பலில் தொற்றிக்கொள்ளும்' - என்றும் கூறுவார்கள்.

கடந்த பதினொரு ஆண்டுகளுக்கு மேலாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பின்னால் ஒட்டிக்கொண்டிருந்த பலர், இப்போது அவரைக் கைவிட்டு மெல்ல அணி மாறத்தொடங்கியிருக்கின்றார்கள். அதை நோக்கும்போது மேற்படி மூழ்கும் கப்பலும் அதிலிருக்கும் எலிகளின் போக்கும்தான் நினைவுக்கு வருகின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் வலது கை, அவரது ' அடுப்படி அமைச்சரவையின்' முக்கிய பிரமுகர் என்றெல்லாம் கருதப்பட்ட அமைச்சர் மங்கள சமரவீரகூட அவரை விட்டு 'நைஸாக'க் கழன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் ஒட்டிக்கொண்டு விட்டார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் தமது தம்பியார் அனுராபண்டார நாயக்காவை வெட்டிக்கொண்டு முன்னுக்கு வரவும், குறுகிய காலத்தில் ஜனாதிபதிப் பதவி வரை முன்னேறவும் சந்திரிகா குமராதுங்கவுக்குப் பக்கபலமாக - முக்கிய துணையாக - இருந்தவர்களுள் இன்று சிறையில் வாடும் எஸ்.பி.திஸநாயக்கவும் ஒருவர்.

ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து எஸ்.பி.திஸநாயக்கவை வெட்டி, விலத்தச் செய்தமை தொடக்கம், மஹிந்த ராஜபக்ஷவுக்குப் போட்டியாகப் பிரதமர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர்காமரைக் கொண்டுவந்து கட்சிக்குள் நிறுத்தியமை வரை ஆளும் கட்சிக்குள் பல குத்துவெட்டுகள், குழிபறிப்புகளுக்குக் காரணமாக இருந்தவர் இந்த மங்கள சமரவீர.

இப்போது ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும், அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இழுபறி வரும்போது தாம் இதுவரை சார்ந்து நின்ற குமாரதுங்கவை மெல்லக் கைவிட்டு, அவருக்குக் கால்தடம் போடும் வகையில் பிரதமர் ராஜபக்ஷ பக்கம் கம்பி நீட்டிவிட்டார் மங்கள சமரவீர.

அவர் மட்டுமல்ல. இப்படிப் பலர் தம்மைக் கைவிட்டுக் களம் மாறியதால் பெரிதும் நொந்து போயிருக்கிறாராம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அதிகாரம் வரும்போது வந்து ஒட்டிக்கொண்ட பலர் இப்போது அது கைமாறப் போகிறது என்று தெரிந்ததும் தடம் மாறத் தொடங்கிவிட்டார்கள் என்ற வேதனை சந்திரிகாவுக்கு.

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் இன்னும் பத்து வாரங்களுக்குத்தான் ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில். அதன் பின்னர் அது ரணிலிடம் அல்லது மஹிந்தவிடம் கைமாறி விடும் என்பது உறுதி.

பதினொரு ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டனுபவித்த அதிகாரத்தைக் கைவிட்டுப் போவதில் யாருக்குத்தான் கவலை இருக்காது?

இலங்கைத் தீவின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்குத் தீர்வுகாணாமல் போகின்றோம் என்ற கவலையே தமக்கு அதிகம் என்று ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார் குமாரதுங்க. என்றாலும் அமைதி வழியில் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகளை ஆரம்பித்தவர் தாமே என்ற பெருமிதத்துடனும், சமாதானப் பேச்சுக்களுக்கு கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன என்ற திருப்தியுடனும் தாம் செல்கின்றார் எனவும் அவர் கூறுகின்றார்.

அமைதி வழியில் இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஒருமுறையல்ல இரண்டு தடவைகள் - அரிய சந்தர்ப்பங்களைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து இலங்கைத்தீவு மக்கள் அவருக்கு அளித்திருந்தார்கள். 1994இல் ஜனாதிபதித் தேர்தலில் முன் எப்போதும் இல்லாதவாறு சுமார் 63 வீதமான வாக்குகளை அவருக்கு வழங்கி, பெரும் ஆதரவையும் தந்திருந்தார்கள். ஆனால், நடந்தது என்ன?

சமாதான தேவதையாய்த் தோன்றி, பின்னர் போர் வெறியராய்த் தன்னை வெளிப்படுத்தி, இன்று எதையுமே சாதிக்காத வெறும் அரசியல்வாதி என்ற பெயரோடு அதிகாரத்திலிருந்து வெளியேறும் துர்ப்பாக்கிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டிருக்கிறார்.

அவரோடு ஒட்டி நின்றவர்களும் இன்று வெட்டிக்கொண்டு ஓடுகிறார்கள். அரசியலிலும் எதையுமே சாதிக்கவில்லை என்ற வெறுமைவேறு. பொருளாதாரத்திலும் நாடு சரிந்து போய்க் கிடக்கின்றது.

அரசியல் சித்து விளையாட்டுக்காக அவர் கொண்ட போர்ச் சன்னதமும் தோற்றுப்போய்விட்டது. முன்னர் எப்போதும் இல்லாத மனோவலிமை வீழ்ச்சியிலும், குழப்பத்திலும் இலங்கை அரசுப் படைகள் சிக்கிக் கிடக்கின்றன. விடுதலைப் புலிகளுடன் திடீரென ஒரு யுத்தம் வெடித்தால் அதை முகம் கொள்ளும் திராணி அரசுப் படைகளுக்கு உள்ளதா என்பது இன்று பெரும் கேள்விக்குறியே.

சர்வதேச அரசியல் உறவு விவகாரங்களிலும் நாட்டுக்குப் பலமான ஓர் ஆதரவுப் பின்னணியை ஏற்படுத்தித் தராத - குழப்ப நிலையைத்தான் சந்திரிகாவின் ஆட்சி, இலங்கைக்கு விட்டுச் செல்கிறது.

இப்படிக் கட்சி ரீதியிலும் சரி, ஆட்சி ரீதியிலும் சரி எந்த இலக்கையும் எட்டாத - எதையும் சாதிக்காத - ஒரு தோல்வி மனப்பான்மையுடன்தான் அதிகாரக் கட்டிலிருந்து இறங்க வேண்டியவராக இருக்கிறார் சந்திரிகா.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அமைதி முயற்சிகள் உட்பட அனைத்து விடயங்களிலும் அரசியல் முதிர்ச்சியுடனும், உளநேர்மையுடனும் நியாய உணர்வோடும் அதிகாரத் திமிரின்றியும் கள யதார்த்தங்களை உணர்ந்தும் நடந்துகொள்ளத் தவறியமையும் -

சூழ இருந்துகொண்டு தங்கள் நலனுக்காக சூழ்ச்சித் திட்டம் வகுத்தவர்களின் 'அளப்புக்கு' அளவுக்கு மீறி எடுப்பட்டதும்-

இப்படி மனம் வெதும்பும் நிலைக்கு ஜனாதிபதி சந்திரிகா தள்ளப்பட்டமைக்கு முக்கிய காரணங்கள். அவரைத் தொடர்ந்து ஆட்சிக் கட்டில் ஏறுபவருக்கு இந்த முன் அனுபவம் - பட்டறிவு- நல்ல பாடமாக அமையட்டும்.

# சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் விவரம்

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் கடந்த ஜூன் மாதம் நடத்திய இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோரின் பெயர் விவரங்களை வெளியிட்டுள்ளது.

சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**இளஞ்சைவப் புலவர்**

**பிரிவு 2**

இ.சியாமினி (முத்துமாரி அம்மன் கோயிலடி, அச்சுவேலி தெற்கு), நா.வாகினி (உக்கிழாங்குளம், வவுனியா), மு.காயத்திரி (குருமன்காடு, வவுனியா) ச.சர்மிளா (கோயிற்புதுக்குளம், வவுனியா), இ.மயூரன் (இராமகிருஷ்ண வீதி, கோண்டாவில் கிழக்கு), சு.சிறிகாந்தன் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), க.கல்பனா (முரசுமோட்டை, பரந்தன்), ஜெ.ஜெயசித்ரா (வேம்படி, காரைநகர்) சு.இமயராஜ் (பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி), ந.திருக்குமரன் (இடைக்குறிச்சி கிழக்கு, வரணி), செ.துஷ்யந்தி (குட்செட் வீதி, வவுனியா).

**பிரிவு 3**

க.கஜரூபன் (கரம்பகம், மிருசுவில்),

**சைவப்புலவர்**

**பிரிவு-2**

த.பிரிந்தா (வேப்பங்குளம் ,வவுனியா), வெ.வரதிதாசன் (வட்டுக்கோட்டை மேற்கு).

**பிரிவு 3**

ஆ.சுதர்சினி (நெளுக்குளம், வவுனியா), இ.இராசேந்திரமலர் (புதுக்குளம், சாஸ்திரி கூழாங்குளம்) செ.பரமேஸ்வரன் (புன்னாலைக் கட்டுவன் தெற்கு), த.குமரன் (அம்பலவாணர் வீதி, உடுவில்). (ஐ-204)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழாச் சிறப்பம்சம்



**கூத்திடும் தாயே தோத்திரம் செய்தேன்**

ஆத்தாளே நின் விழாக்கள்
ஆகமப் பூசை யாலே
ஏத்திடு மெங்கள் துன்பம்
எல்லாமே தீருமம்மா
கூத்திடும் தாயே நின் மெய்க்
கோலத்தை மனதிற் கண்டேன்
தோத்திரம் செய்தேன் உன்றன்
தொண்டர்கள் வாழி வாழி.

**அருட்கவி சீ.விநாசித்தம்பி**

# புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைவாக இலவச பாடநூல்கள் அமைந்திருக்கும்

## இந்த மாதம் முதல் விநியோகிக்க ஏற்பாடு

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டுக்கான மாணவர்களின் இலவச பாடநூல்கள் இம்மாதம் முதல் விநியோகிக்கப்பட உள்ளன என்று கல்வி அமைச்சின் பாடநூல் வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.ஏச்.பி.கீ. கனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற 2006ஆம் ஆண்டு பாடநூல் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மற்றும் மலையகத்தைச் சேர்ந்த சகல கோட்டக்கல்வி அதிகாரிகள், தேசிய பாடசாலை அதிபர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

புதிய சீர்திருத்தத்தின்படி சகல தேசிய பாடசாலைகளுக்கும் இரண்டாயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டிருக்கக்கூடிய சகல அரச பாடசாலைகளுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் பாடநூல்களை நேரடியாக விநியோகிக்கும் என அங்கு தெரிவிக்கப்பட்டது. ஏனைய பாடசாலைகளுக்கு வலயக்கல்வி அலுவலகங்கள், கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக வழங்கப்படும். இப்பாடநூல்களை அச்சிட்டு விநியோகிப்பதற்காக 770.4 மில்லியன் ரூபாவினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கு 225வகையான பாடநூல்கள் அச்சிடப்படுகின்றன.

2006ஆம் ஆண்டு தரம் 10இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான கணிதம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சமூகக் கல்வி மற்றும் வரலாறு ஆகிய நூல்கள் வழங்கப்பட உள்ளன. அதேவேளை தரம் 8இல் பயிலும் மாணவர்களுக்குப் பல்பாடத்தேர்வு நூல்கள் வழங்கப்படும். பாரம் கூடிய பெரிய பாடல்நூல்களை மாணவர்கள் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய வகையில் பகுதிபகுதியாகப் பிரித்து வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு பாடநூல்கள் நல்ல தரமுடையவையாகக் கூடிய செலவில் அச்சடிக்கப்படுகின்றன. இந்நூல்களை மீளவும் பாவிக்கக்கூடிய முறையில் மாணவர்களைக் கவனமாகப் பேணுமாறு ஆசிரியர்கள் மூலம் அறிவுறுத்தப்படவேண்டும் எனவும் பாடநூல் வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.எச்.பி.கீ. கனகே எடுத்துக் கூறினார். இவ்வகை நூல்கள் குறைந்தது 3 வருடங்களுக்காவது பாவிக்கப்படவேண்டும் எனவும் பணிக்கப்பட்டது. பாடநூல் வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர் நாயகம் ஜனாப்ஹஜ் ஜரி முகமது, பிரதி ஆணையாளர் நாயகம் திருமதி குளோறா நாணயக்கார ஆகியோரும் இக்கலந்துரையாடலில் உரையாற்றினர். (ப-152)

**நாளை**

ஆவணி 21
செவ்வாய்க்கிழமை
06.09.2005
திதி: திருதியை
பின்னிரவு 04.13வரை
நட்சத்திரம்: அத்தம்
முன்னிரவு 11.02 வரை
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 03.04- 04.34
(யாவும்
பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

நீ தூய்மை உள்ளவனாகவும் வலிமை உள்ளவனவாகவும் இருந்தால் நீ ஒருவனே உலகில் உள்ள அத்தனை பேருக்கும் சமமானவனாவாய்.
-சுவாமி விவேகானந்தர்.

அருள்மிகு துர்க்கை அம்மன் ஆலயம் - தெல்லிப்பழை



இன்று
இரண்டாம் நாள்

பாடு. பரவு. பணிசெய். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க அனுசரணையுடன்

எங்களின் வாழ்வுக்கு எழில் நலம் சேர்த்து என்றுமே எங்களைக் காப்பாய்!

விழா சிறப்புற வாழ்த்துவோர் :-
அம்பாள் தொலைத்தொடர்பு சேவை
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
0094 - 021 - 222 3470




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பஜாஜ் 4 STROKE பெற்றோல் மொடல் ஆட்டோ விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 23, சேச்லேன், நாவாந்துறை. T.P. : 021-222 5990, 021222 3688 (39579)

பாவனையிலுள்ள SONY கலர்T.V. 27" (MODEL NO.K.V- 2782 MADE IN JAPAN) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 593 858 (39560)

இயங்கக்கூடிய நல்ல நிலையில் உள்ள அரைக்கும் மில் உபகரணங்கள் டீசல் என்ஜினுடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777- 110508 (39589)

ஹோமியோபதி மருத்துவப் புத்தகங்கள விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.35, நாவலர் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். (39595)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம், மானிப்பாய் றோட்டிற்கு அண்மையில் ஆலடிச்சந்தியில் முருகமூர்த்தி பாடசாலை வீதியில் (றான்ஸ்போமர் அருகில்) 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 21, ஸ்ரேசன் றோட், கொக்குவில். T.P.:021 222 5597, 0114513295, 4591148. (39599)

ஆனந்தன் வடலி வீதியில் 6 பரப்புக் காணி (செபமாலை மாதா கோயிலிற்கு முன்பாக) பகுதியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு: த.பரமசாமி, இல.33, இரண்டாவது விதானையார் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். (39620)

## வீடு விற்பனைக்கு

அரியாலை சுப்பிரமணியம் வீதியில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:T.P. : 0777 570279 (39562)

## பணிப்பெண் தேவை

மூன்று அங்கதவர்கள் கொண்ட குடும்பத்தினருக்கு பணிப்பெண் தேவை. தங்கி நின்று கடமையைச் செய்தலை எதிர் பார்க்கின்றோம். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: செ.சிறீதரன், 774, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் T.P. NO. 021-222-6502 (39594)

## வாடகைக்கு

சமையல் அறையுடன் கூடிய அறை ஒன்றும் சகல வசதியுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 021 222 6919 அல்லது 077 6589163, பலாலி றோட், முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு. (39520)

## கடை வாடகைக்கு

K.K.S. வீதிக்கும் நாவலர் சந்திக்கும் அருகில் மனோகரா தியேட்டருக்கு முன்பாக கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 555,K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 2385. (39605)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

03.09.2005 அன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சிறிய பணப்பை கண்டெடுக்கப்பட் k ൦ ĺ S.V.M.,154, ஆஸ்பத்திரி வீதியில் தொடர்பு கொள்ளவும். (39607)

## தவறிவிட்டது

நாகம்மாள் கோவில் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த கார்த்திகேசு இராஜ கோபாலன் என்பவருடைய தே.அ.அட்டை (461372635V), விசேட அடையாள அட்டை (09060 23355), சாரதி அனுமதிப்பத்திரம் (A.000 711191) ஆகிய ஆவணங்களுடன் பாக்கொன்று கடந்த 21.08.2005 வல்லிபுர ஆழ்வார் ஆலய வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (39619)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 07.09.2005மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தெடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, றஞ்சித், 517, ஸ்ரான்லிறோட் ,P. ரவி, சாவகச்சேரி, றாதா, மாவடி, வட்டுக்கோட்டை.T.P.: 222 2867, 2223529 (39551)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள் (44/=), பேட்டுக் குஞ்சுகள் 05.09.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடி கிளையிலும் சுட்டிப்பாம்- வட்டுக்கோட்டை, சந்நிதிபாம்- தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம்- திருநெல்வேலி, முருகன்- சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39289)

## ஜும் ஆப் பள்ளியில் விசேட பிரார்த்தனை

யாழ்.,செப்.5

மானிப்பாய் வீதியிலுள்ளபள்ளி நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் புனித மஃறாஜ் இரவைமுன்னிட்டு விசேட பிரார்த்தனை கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் பெரிய முகைதீன் ஜும் ஆப் பள்ளியில் நடைபெற்றது.

இஷா தொழுகையை அடுத்து பேஸ் இமாம் அல் ஹாஜ் பாஷா முகிதீன் பிரார்த்தனையை நடத்தினார். (ஐ-204)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல15, சிராம்பையடி வீதி (off Stanly Rd.)
Tele:- 0777 222422, 0773151647

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
**Computerized Accounting**
*AccPac + Quick Books Pro + MYOB*
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- fore Casting
- Business Planning


80% Off

இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
10/10/2005 9.30 AM
11/10/2005

Tally Accounting Package
புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது


## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 26 . 10 . 1942
இறப்பு 11 . 09 . 1995

அமரர்
# முருகேசு கனகசபை

(ஆசிரியர்)

திதி: ஆவணி அபரபக்க துதியை

ஆண்டுகள் எத்தனை தான் கடந்தென்ன
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆனந்தமாக எமைத்தாங்கி அரவணைத்து
ஆறுதல் அளிக்க நீங்கள் இல்லையே அப்பா!
கணமும் கலங்கி நிற்கின்றோம்.

கைதடி, நுணாவில்,சாவகச்சேரி.
(39512) (39-11-45)

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்பின் உறைவிடமே!
அறிவின் திருவுருவே!
பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் ஒளிச்சுடரே!
உங்கள் நினைவுடனே
உருண்டு போனது ஓராண்டு!
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
அப்பாவே.......
அழியாது உங்கள் நினைவு!
உள்ளம் உள்ளவரை
உங்கள் நினைவிருக்கும்
கண்கள் உள்ளவரை
கவலைத் துளியிருக்கும்
அப்பாவாய் காட்சி தந்த
ஆத்மாவே சாந்திபெற
உங்கள் பிரிவால்
உறைந்து போன எங்கள்
உதிரத் துளிகளையும்
உங்கள் நினைவால்
உதிரும் எங்கள்
கண்ணீர்த் துளிகளையும்
காணிக்கை ஆக்குகின்றோம் என்றும்
கரம் கூப்பித் தொழுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# அமரர் தம்பு கந்தையா

(மர அரிவு ஆலை உரிமையாளர்)

மலர்வு 15.02.1937

திதி: 05.09.2005

உதிர்வு 17.08.2004

காளிகோயிலடி,
வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை.
(39609) (39-11-45)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



# அமரர் நடராஜா இரத்தினதுரை

(இளைப்பாறிய சாரதி)

திதி: துதியை

அன்னை மடியில் 16.06.1942

ஆண்டவன் அடியில் 15.09.2004

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓராயிரம் நினைவுகள் நெஞ்சில்
ஓங்கி ஒலிக்க அதை மீட்டி
ஓசையின்றி அழுகின்றோம்.


நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.
(39526) (39-11-45)

உம் பிரிவால் துடிக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



# யாழ். - வண்ணை கிழக்கு
# கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் ஆலயம்
# மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ் - 08.09.2005

## கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர வரலாறு






'செல்வாய செல்வம்', சிற்றம்பல மேய செல்வன் கழலேத்தும் செல்வம்' என்றெல்லாம் சமயச் சான்றோர்களால் ஏற்றிப் போற்றியதும் பேறுகளில் எல் லாம் விழுமியதும் ஆகிய ''திருவடிக்கு தொண்டு செய்து ஆட்படுதல்'' எனும் உயரிய குறிக்கோளுடன் வாழ்ந்தும் வாழ்வதுமாகிய ஒருமித்த சிந்தனையுடையார்- ஆன்மீகப் பெருமக்கள், சித்தர்கள் தங்கள் வாழ்வியல் நெறியில் வழிபாட்டிற்கும் அது சார்ந்த செயற்பாடுகளுக்கும் முதன்மைதந்து போற்றினர்.

சிவம், சிவனை வழிபடும் சைவர், சித்தர், அவர்தம் நெறி, திருவடி வணக்கம், இறைபற்றிய உண்மையை உணர்ந்து தெளிதல், உண்மையை சைவநெறிச் சித்தர் நோக்கில் இனங்கண்டு அவ்வவற்றை அவர்கள் உய்த்து உணர்தலாற்றைக் கூறுவதேயாகும்.

சித்தர் பற்றியும் அவர்தம் நெறிபற்றியும் பலவேறு கருத்துக்கள் உலகில் நிலவுகின்றன. அவரவர் உணர்திறனுக்கேற்ப ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கருத்துக்கூறி வருகின்றனர். சித்தர் என்றால் அட்டமா சித்திகளைச் செய்ய வல்லவர்கள், எண்வகை யோகங்களைச் செய்பவர்கள், இறை உண்மைகளை (தேவ இரகசியங்களை) பரிபாஷை மூலமாகக் கூறுபவர்கள். இவர்கள் இறைஞானத்தைக் கை வரப் பெற்றவர்கள் அத்தகைய ஒரு ஞானியாகக் கடையிற் சுவாமிகளை முதன்மையாகக் கொண்டு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கு நாவலர் வீதியில் அமைக்கப்பட்டதே குருவார அன்ன சத்திர சிவன் ஆலயம் ஆகும்.

அறிவுருவாக ஒளிரும் சிவத்தையும் அது உறைந்திருக்கும் சிவ லோகத்தையும் தமக்குள்ளே கண்டு சிவமாய் உருமாறி ஆணவம்,கன்மம் மாயை என்ற மும்மலத்தினையும் வென்றவர்களே சித்தர்கள். இவ் வாறே கன்னட தேசத்திலே பிறந்து ஒரு நீதிபதியாகத் தமது வாழ் நாளைக் கழித்த கடையிற்சுவாமியவர்கள் ஒருமுறை ஒரு குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க வேண்டிய சந்தர்ப்பம் எழுந்தபோது இறைவன் படைத்த உயிரை எடுப்பதற்கு நான்யார் என்ற வினா அவருடைய மனதிலே தோன்றியது. அந்தக்கணமே அவர் தனது நீதிபதிப் பதவியைத் துறந்து ஞானியானார் என்று வழக்காறுகள் கூறுகின்றன. இவ்வாறாக மெய்ஞ்ஞான ஒளித்தூண்முதலால் தனது தொழிலைத் துறந்து இறைமாண் பினை மக்களுக்கு எடுத்துக்கூறும் ஒரு சித்தராக அவர் வாழ்ந்துவரும் காலத்திலே, வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த வைரமுத்துச் செட்டியார் தமது வியாபார நோக்கத்திற்காக இந்தியா சென்று வருவது வழமை. ஒருமுறை அவர் சென்ற சமயம் முத்தி யானந்தர் என்ற தீட்சா நாமம் கொண்ட கடையிற் சுவாமிகளைத் தரிசனம் செய்யும் பேறு கிட்டியது. தாங்கள் அடியேனது இல்லத்திற்கும் எழுந்தருள வேண்டும் என்று (14ஆம் பக்கம் பார்க்க)



பிள்ளையார் ஆலயம்

## கருணை உள்ளம் படைத்தவர்




போர்க்காலச் சூழலினால் சிதைவுற்றிருந்த இந்த ஆலயத்தைப் புதுப் பொலிவுற அமைத்துத்தந்த பெருமை மிகப் பிரபல்யம் பெற்ற தொழில் அதிபரும் ஸ்ரீ டியிற்றல் கலர் லாப், ஸ்ரீ அமலா, ஸ்ரீராம் நகை மாடங்களின் உரிமையாளருமாகிய திரு.செ.வீ.சிறீதரன் அவர்களையே சாரும். இள வயதிலேயே சிறந்த தொழிலதிபராக விளங்கும் அவர், மிகுந்த கருணை உள்ளம் படைத்தவர். சிறந்த கொடை வள்ளல். மற்றவர்களைப் போல் தானுண்டு தன் குடும்பமுண்டு என்ற சுயநலமில்லா மல் மக்கள் நலனில் அக்கறை கொண்டவர். அதற்கு எடுத்துக்காட்டாக, 'தாயகம்' என்னும் அநாதைச் சிறுவர் இல்லத்தை அமைத்து, அவர்களுக்கு உணவு, உடை, கல்வி என்பவற்றை நல்கி, அவர்களையும் சமூகத் தில் நற் பிரஜைகளாக ஆக்கிவருகின்றார்.

அந்தவரிசையில், சமூகத்தொண்டுடன் நின்றுவிடாமல் பல சமயத் தொண்டுகளையும் ஆற்றிவருகின்றார். பல ஆலயங்களுக்கு நன்கொடை வழங்கி உள்ளார். அவர் ஆற்றிய சமயத் தொண்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இந்தக் கடையிற்சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் ஆலயம் ஆகும். அவர் தனது சொந்தச் செலவிலேயே இதனைப் புனரமைத்துத் தந்துள்ளார். அத்துடன் பரிவார மூர்த்திகளுக்கான (பிள்ளையார், வைரவர்) கோயில்களையும் அமைத்துத்தந்துள்ளார்.

இத்தகைய கருணை உள்ளம் படைத்த அவரின் குடும்பத்தினர் எல்லா நலனும் பெற்று சிறப்புடன்வாழ இறைவன் துணை நின்றருள்புரிவாராக!

- தர்மகர்த்தாக்கள்.



முருகன் ஆலயம்

## நல்லிதயம்கொண்டவர்களின் உதவிக்கு நன்றி





சித்தர்களுள் முதன்மைபெற்று விளங்கும் கடையிற்சுவாமிகள் மீது பேரன்பு பூண்ட திரு.வைரமுத்து என்பவர் சுவாமிகளின் பெயரில் தனது நிலபுலன்களைத் தர்மசாதனஞ் செய்ததோடல்லாமல், கடையிற்சுவாமிகளின் சீடராகிய சின்னசுவாமிகளுக்கும் சமாதிக் கோயிலமைத்து அதில் சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து இந்த ஆலயத்தைப் பரிபாலித்து வந்தார்.

இவரின் பின்னர், சிலகாலம் தர்மகர்த்தா (றஸ்ரி) மார்களின் பராமரிப்பிலிருந்த இந்த ஆலயம் மீண்டும் வைரமுத்து அவர்களின் வழித்தோன்றல்களின் பராமரிப்பில் உள்ளது.

கால ஓட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழலினால் ஆலயம் சேதமடைந்தது. இதனைக் கண்ட மேற்கூறிய நல்லிதயம் படைத்தவர்கள் இந்த ஆலயத்தைப் புனரமைத்துத் தந்தார்கள்.

வைரமுத்து கந்தையாவின் பிள்ளைகளில் ஒருவராகிய மலேசியாவில் உள்ள ஞானப்பிரகாசத்தின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இந்த ஆலயத்தின் பக்கத்தில் இருந்து இன்னொரு பிள்ளையாகிய சோமசுந்தரத்தின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சேர்ந்து புனரமைக்கப்பட்ட இந்த ஆலயத்துக்கு வர்ண வேலைகள், மின்சார வேலைகள், கதவு வேலைகள் என்பவற்றைச் செய்ததோடல்லாமல், கும்பாபிசேகத்துக்குரிய முழுச்செலவுகளையும் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்த ஆலயத்தின் சூழலில் உள்ள நல்லிதயங்கொண்ட அன்பர்களும் தங்களால் இயன்ற சிறு பண உதவிகள் புரிந்து இந்த ஆலயம் புதுப்பொலிவுபெற ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

## சமூகத் தொண்டுடன் சமயத்தொண்டு



வர்த்தகப் பிரமுகரும், கமல் செறமிக்ஸ் நிறுவனங்களின் உரிமையாளருமாகிய திரு.ச.கைலாயபிள்ளை அவர்கள் பல சமயத் தொண்டுகளை ஆற்றிவருபவர். அநாதை இல்லங்கள், வயோதிப இல்லங்களுக்கும் நன்கொடைகள் செய்து வருபவர். மேற்படி ஆலயம் புனமைக்கப்பட்டு வருவதைக் கண்ணுற்றுத் தானாகவே முன்வந்து முருகனுக்குரிய பரிவாரக் கோயிலைக் கட்டித்தந்து அதற்குரிய சுப்பிரமணியர் வள்ளி தெய்வானை சமேத விக்கிரகத்தையும் தந்துதவியவர். அவருடைய சமூக, சமயப்பணி மேன்மேலும் தொடர எம்பெருமான் துணையாக இருந்து அருள்புரிவதுடன், அவருடைய குடும்பம் சிறப்புடன் வாழ துணைபுரிவாராக.

- தர்மகர்த்தாக்கள்.

## கிரியாகால விவரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு நாவலர் வீதியில் வரலாற்றுப் புகழ்மிக்க சித்தர்கள் வாழ்ந்த கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திர சமாதிக் கோயிலில் கோயில் கொண்ட ருளிய ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிவசிதம்பரேஸ்வரப் பெருமான் தேவஸ்தான புனராவர்த்தன பஞ்சகுண்ட அஷ்டபந்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகப் பெருவிழா 2005.09.08ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி 30 நிமிடம் முதல் 11 மணி 40 நிமிடம் வரையுள்ள சுப முகூர்த்தத்தில் நிகழத்திருவருள் கூடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Jaffna College Alumni Association

The Annual general meeting of the above Association will be held on 17th September 2005 in the Ottley Hall at 9a.m. those wishing to participate in the Lunch kindly buy the tickets for Rs.100. per head, on or before September 15th from the college office.

T.Anandaratnam
Hony Secretary
J.C.A.A. Vaddukoddai

(39583)(50)

### கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

10.09.2005 }
14.09.2005 } பகல் 10.00 மணி

அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் தலைவர்

### திரு.ப.கனகலிங்கம்

அவர்களின் அன்புத் தந்தை

### நாகமுத்து பரராசசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புங்குடுதீவு - நயினாதீவு
ப.நோ.கூ.சங்கம்.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

(சி/45023)(32-14-45)

உ
குகமயம்

### தென்மராட்சி- மந்துவில்- புளியந்திடல்
### அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
### ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ



## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

முருக அடியார்களே!

இலங்கைத் தீபத்தின் வடபால் சகல வளங்களும் கொழிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வயலும், வயல்சார்ந்த மருத நிலத்தில் பனை, தென்னை பயன்தரும் மந்துவில் என்னும் திருவூரில் திருவுளங்கொண்டு எழுந்தருளி இருக்கின்ற வரலாற்றுப் பெருமையும் கொண்ட புளியந்திடல் வள்ளி தெய்வயானை சமேத கந்தப்பெருமானுக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும் நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம்ஆவணிமாதம் 24 ஆம் நாள் 09.09.2005 வெள்ளிக்கிழமை சிங்க லக்கினம்கூடிய அதிகாலை 6.34 முதல் 7.04 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நிகழ இறையருள் கூடியுள்ளது. காணுதற்கரிய கும்பாபிஷேகக் காட்சியையும் அதற்குமுன் நடைபெறும் அனைத்துக் கிரியைகளிலும் கும்பாபிஷேகத்தின் பின் நிகழும் மண்டலாபிஷேகத்திலும் அடியார்கள் வந்து கலந்து கந்தப் பெருமானைத் தரிசித்து சர்வாஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

### கிரியாகால நிகழ்வுகள்

05.09.2005: திங்கட்கிழமை பகல் 12 மணிமுதல் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம்
06.09.2005: கிரியை நிகழ்வுகள்
07.09.2005: கிரியை நிகழ்வுகள்
08.09.2005: மு.ப.8.00 மணிமுதல் பி.ப 4.00 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல்
09.09.2005: காலை 6.34 மணி முதல் 7.04 மணிவரையுள்ள நேரத்தில் கும்பாபிஷேகம்

பிரதிஸ்டா பிரதம சிவாச்சாரியார்
கிரியா சிரோன்மணி
**சிவஸ்ரீ ந.இராசேஸ்வரக்குருக்கள்**
(சரசாலை இராமாவில் பிள்ளையார் ஆலயம்)

ஆலயகுரு
பிரம்மஸ்ரீ கு.குணதேவசர்மா

அனைவரும் வருக! கந்தனருள் பெறுக!

மந்துவில்,
கொடிகாமம்.

முருகன் திருவருள் முன்கொண்டு
**ஆலய/ பரிபாலன சபை.**

அனுசரணையாளர்:

(சி/45019)(32-39-14-45)

### "வி.எம்.கே" நகை மாளிகை

இல.15, கண்டி வீதி, சாவகச்சேரி. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

### "அன்னையே உனை நினையாத நாளுமுண்டோ"

மலர்வு
24
06
1947



உதிர்வு
17
08
2004

### திருமதி சந்திரகாந்தி இராஜகுலேந்திரன்

திதி:05.09.2005

''நல்லன நினைந்து, நல்லனபேசி நல்லன செய்து
குற்றம் மறைத்து, குணந்தனைப் போற்றி
அன்பால் அணைத்து, பண்பால் உயர்ந்து
உற்றார் ஊரார் உள்ளத்தில் நிலைத்த
எங்கள் அம்மாவே, அன்புத் தெய்வமே
எந்நாளும் உங்கள் நினைவுநாளே எமக்கு!''

மணியர்பதி வீதி,
கோக்குவில் மேற்கு.

(39554)(32-14-45) **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்
09
-
05
-
1976



விண்ணுலகில்
18
-
08
-
2004

### திருமதி மு.நந்தினி

திதி: துதிகை 05.09.2005

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகளானாலும்
நெஞ்சினிலே நின்அன்பை மறவா நினைவுகளை
நித்தமும் எண்ணி எண்ணி உருகுகின்றோம் நாமிங்கே!
உத்தமியே பெற்றெடுத்த வயிறு பற்றியெரிகின்றதே
தலைவாரி பூச்சூடி மகிழ்ந்த மனங்கள் துடிக்கின்றனவே!
உன் குரலோசை கேளாது வழிமேல் விழிவைத்து ஏங்குகின்றோம்
அன்று கொல்லும் மனித நீதி வென்றுவிட்டாலும்
நித்திலத்தில் என்றுமே இறைநீதி மறைந்தே போகாது!
ஈர விழிகளுடன் உன்பிள்ளைகள் உனைத்தேடி
நாம் தவிக்கின்றோம் ஒரு தடவை உந்தன்
எழில்முகம் காட்டாயோ? அவனியில் வாராயோ?

உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(39603)(32-14-45)

சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்(லதீசன், லக்சாயினி), தாய்,
அக்காமார், அண்ணா, அண்ணி, அத்தான்மார், மாமா,
மாமி, உற்றார், உறவினர்.

இல.88/1,
ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



நமோ நாராயணா

## திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணி மாதம் 20 ஆம் நாள் இன்று (05.09.2005) திங்கட்கிழமை துதியைத் திதியும் உத்தர நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 10.59 மணிமுதல் 12.57 மணி (ப.நே.) வரையுள்ள சுபமுகூர்த்த நல்வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## மணியம் இம்பெக்ஸ் MANIYAM IMPEX

எனும் வியாபார ஸ்தாபனம் ஆரம்பிக்க இறைவன் திருவருள் துணைகொண்டு இருப்பதால் தாங்கள் வருகை தந்து வியாபாரம் சிறக்க வாழ்த்திச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

75, (121A) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2819

(39577)(39-32-14-45)

தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பாடசாலைகள் கிரிக்கெட்

# சென்.பற்றிக்ஸ், சென்றல் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றன

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 15 வயதுப் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் 17 வயதுப் பிரிவில் யாழ்.மத்திய கல்லூரியும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற 15 வயதுப்பிரிவுக்கான அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 9 விக்கெட்டுக்களை இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றனர்.

நவதீபன் ஆட்டம் இழக்காமல் 55 ஓட்டங்களையும் நிலோஷன், ரகேல்ஷன் ஆகியோர் முறையே 30, 40 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிவகணேஸ் 28 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் ஜெயவாணன் 26 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 54 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சுஜந்தன், வக்கீரன் ஆகியோர் முறையே 18, 19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத் தனர்.

மைக்கல் இரண்டு ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் கேதீஸ்வரன் 24 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது.

யதீஸ்வரன் ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களையும் மலின்குமார், றெக்னோ ஆகியோர் முறையே 25, 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

லினோத்குமார் 20 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் டயான் 25 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

லினோத்குமார், ஜோன்சன், நவநீத் ஆகியோர் முறையே 40, 16, 13 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

விதுபாலா 16 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (3-190)

## தேர்ஸ்டன் கல்லூரியை வென்று சம்பியனானது சென். பற்றிக்ஸ்

இலங்கை பாடசாலைகளுக்கு இடையே 'அஸ்ரா' கிண்ணத்துக்காக 17 வயதுப் பிரிவினருக்கான பிரிவு 4 இற்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டம் கடந்தவாரம் கொழும்பு வெஸ்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி ஒரு விக்கெட்டால் தேஸ்ரன் கல்லூரியை வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு தேஸ்ரன் கல்லூரி அணியினர் 47.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

தர்வினா, அஷான், ரங்கோஜீலா ஆகியோர் முறையே 58, 31, 19 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

ஜீனத்ராஜ் 13 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் ஜக்சன் 29 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 49.4 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களைஇழந்து170ஓட்டங்களைப்பெற்றது.

விதுபாலா ஆட்டம் இழக்காமல் 11 ஓட்டங்களையும் ஜக்சன், ஜனன்ராஜ், ஜெயந்திரன், ஜீனத்ராஜ் ஆகியோர் முறையே 34,27,20,20 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

மதுரசிங்கி 32 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பிறேமரத்ன 28 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் குமார 16 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)

## தேசிய மட்டத்துக்கு தெரிவு



யாழ்ப்பாணம்,செப்.5

அண்மையில் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற மாகாண மட்டப் போட்டியில் கொடிகாமம் அரசினர் வித்தியாலய மாணவி செல்வி ம.செல்வகுமாரி 21 வயது பெண்கள் பிரிவில் நீளம் பாய்தலில் மூன்றாமிடம் பெற்று தேசியமட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளார். (3)

**தீவக மட்ட உதைபந்தாட்டம்:**

## தம்பாட்டி, மெலிஞ்சி முனை அணிகள் இறுதியாட்டத்துக்குத் தெரிவாகின

யாழ்ப்பாணம்,செப்.5

ஊர்காவற்றுறை தம்பாட்டி காந்திஜீ சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தி வரும் தம்பாட்டி கிராம மாவீரர்களின் ஞாபகார்த்தமான தீவக ரீதியிலான 9பேர் பங்குகொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ வி.க (ஏ) அணியும் ஊர்காவற்றுறை மெலிஞ்சி இருதயராசா வி.க அணியும் வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் தம்பாட்டி காந்திஜீ (ஏ) அணியை எதிர்த்து வேலணை அம்பிகை நகர் உதயசூரியன் வி.க. (பி)அணி மோதியது.

தம்பாட்டி காந்திஜீ (ஏ) அணி எதிர்த்து விளையாடிய வேலணை அம்பிகைநகர் உதயசூரியன் வி.க (பி) அணியை 5:0 என்ற கோல்களை வெற்றிகொண்டு இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றோர் அரையிறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை இருதயராசா வி.க (ஏ) அணியை எதிர்த்து எழுவைதீவு பற்றிமா வி.க. மோதியது.

ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனை இருதயராசா வி.க எதிர்த்து விளையாடிய எழுவைதீவு பற்றிமா வி.கவை 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (3-190)



**யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கம் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.**

**நிகழ்வில், யாழ். மாவட்ட கரபந்தாட்ட சங்கத்தின் செயலாளர் எஸ். மனோகரன் உரையாற்றுவதையும் அருகில் சங்கத்தின் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம், சங்க பொருளாளர் எஸ்.ஏகாம்பரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (3-190)**

## பருத்தித்துறை துடுப்பாட்டம்

### ஆறு விக்கெட் வெற்றி ஒற்றுமை வி.கவுக்கு!

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் ஓர் ஆட்டத்தில் வல்வெட்டி ஒற்றுமை வி.க ஆறுவிக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

வெக்டர் வி.க அணிக்கும் வல்வெட்டித் துறை ஒற்றுமை வி.கவுக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய வெக்டர் வி.க அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றனர்.

அர்ஜீன் ராஜ், வேதராசா முறையே 31, 26 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். மகேசன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை ஒற்றுமை வி.க அணியினர் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரமேஷ், பிரதீபன் ஆகியோர் முறையே 40.21 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிவபிருந்தன் 38 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். (3-190)

### வெக்டர் அணி 62 ஓட்டங்களால் வெற்றி

இந்தச் சுற்றுப் போட்டியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் வெக்டர் வி.க அணியை எதிர்த்து டயமன்ஸ் வி.க அணி மோதியதில் வெக்டர் வி.க அணி 62 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வெக்டர் வி.க. அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

முரளிதரன், அர்ஜின்ராஜ் முறையே 40, 29 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ராஜேஸ் 20 ஓட்டங்களைத் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் சுபேத்திரன் 24 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டயமன்ஸ் வி.க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது.

ரவி 14 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

சிவபிருந்தன் 25 ஓட்டங்களைக் கொடுத்து மூன்றுவிக்கெட்டுக்களையும் முரளிதரன் 8 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் அர்ஜின்ராஜ், ஆறு ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (3-190)

### மைக்கல் வி.க. வெற்றியீட்டியது

கொம்மாந்துறை வி.க அணிக்கும் மைக்கல் வி.க அணிக்கும் இடையில் இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் மைக்கல் வி.க எட்டு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொம்மாந்துறை வி.கஅணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 107 ஓட்டங்களைப் பெற்றது.

மதுசந்தன், மதுசூதன், கேசவன் ஆகியோர் முறையே 18, 16.17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

ரகுவரன் 20 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களையும் சிவபரன் 16 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் வி.க அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது.

கமலேஸ்வரன் ஆட்டம் இழக்காமல் 72 ஓட்டங்களையும் வேணி 13 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

மதுசூதன், கேசவன் முறையே தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர். (3-190)




# றோட்டரக்ட் கழகம் நடத்தும் வங்கிகளுக்கிடையிலான மென்பந்தாட்டம்

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் யாழ். மாவட்ட வங்கிகளுக்கிடையில் மென்பந்துச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்திவருகின்றது.

இச்சுற்றுப்போட்டியின் சில முடிவுகள் வருமாறு:-

✱ இலங்கை வங்கிக்கும் ஹற்றன் நஷனல் வங்கிக்கும் இடையில் நடைபெற்ற ஓர் ஆட்டத்தில் முதலில்துடுப்பெடுத்தாடிய இலங்கை வங்கி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது.

விக்கினராஜ, சிவவேழழகன், ஜெயரெட்ணம் ஆகியோர் முறையே 7, 2, 2, ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத் தனர்.

செந்தில்ராஜ், சஞ்ஜீவ் ஆகியோர் முறையே இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹற்றன் நஷனல் வங்கி அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

யோகதாஸ், ஜீவராஜ், சதிஷன் முறையே 13,7,6 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிவவேழழகன் இரண்டு விக்கெட்டுக்களையும் ஜெயகோபி, ஜெயரெட்ணம் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

ஹற்றன் நஷனல் வங்கி 5 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றது.

✱ தேசியசேமிப்புவங்கிஅணியை எதிர்த்து ஹற்றன் நஷனல் வங்கி அணி மோதியதில் தேசிய சேமிப்பு வங்கி 8 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தேசிய சேமிப்பு வங்கி அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப்பெற்றது.

இன்பராஜீ, மேனன் ஆகியோர் முறையே 32, 23 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சஜ்ஜீவ் மூன்று விக்கெட்டுக்களையும், விஸ்ணுவர்த்தன் இரண்டு விக்கெட்டுக்களையும் செந்தில், ராஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹற்றன் நஷனல் வங்கி அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களைப்பெற்றது.

சதீஸ், யோகதாஸ் ஆகியோர் முறையே 16, 11 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சீலன் மூன்று விக்கெட்டுக்களையும், மேனன் இரண்டு விக்கெட்டுக்களையும், ராஜறூபன், சுதன் முறையே தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

✱ வர்த்தக வங்கி அணியை எதிர்த்து செலான் வங்கி அணி மோதியதில் செலான் வங்கி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வர்த்தக வங்கி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றது.

பிரன்சிஸ், சிவமயூரன், குமரன் ஆகியோர் முறையே 13, 8, 6 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

செந்தூரன், பாஸ்கரன் முறையே நான்கு விக்கெட்டுக்களையும், டில்சான், கொலின் முறையே தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய செலான் வங்கி அணியினர் 9 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். குமணன், டில்சாண் ஆகியோர் முறையே 14, 9 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

சிவமயூரன் மூன்று விக்கெட்டுக்களையும், பிரன்சிஸ், கவிதரன் முறையே இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

✱ தேசிய சேமிப்பு வங்கி அணியை எதிர்த்து இலங்கை வங்கி அணி மோதியதில் தேசிய சேமிப்பு வங்கி 72 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தேசிய சேமிப்பு வங்கி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றது.

சுதன், ஆனந்தம் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 46, 25 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

சிவவேழழகன் மூன்று விக்கெட்டுக்களையும் அன்ரனிதாஸ், ஜெயகோபி முறையே தலா ஒரு விக்கெட்டினையும் வீழத்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை வங்கி அணி சகல விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

சிவவேழழகன் 8 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

மேனன், ராஜறூபன், பிரதீபன் முறையே இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (3-190)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# கோண்டாவிலில்

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின் வாழும் கலைப் பயிற்சி இலவச அறிமுக உரை

நாள்:- 05-09-2005 திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்:- கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம். புகையிரத நிலைய வீதி.
பயிற்சி நாள்கள்:- 06.09.2005 முதல் 11.09.2005 வரை
பயிற்சி நேரம்: மாலை 6 மணி முதல் 8 மணி வரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549

*அன்பில் மலருங்கள்* *உங்களை உணருங்கள்*

*அனைவரும் வருக!*

www.artofliving.org (39528) www.srisriravishankar.org


# மருந்துப்பொருள்கள் அன்பளிப்பு

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி லயன்ஸ் கழக மருத்துவ பிரிவுத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையிலான குழுவினர் பொருள்களை வைத்தியசாலை டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் கையளித்தனர்.

கடந்த மாதம் ஒரு தொ[illegible]தி மருத்துவ உபகரணங்களை லயன்ஸ் கழகத்தினர் ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பாக வழங்கிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-117)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

| தோற்றம் | | திருநிழல் |
|---|---|---|
| 21 - 07 - 1924 |  | 06 - 08 - 2005 |

## திருமதி நல்லம்மா செல்லத்துரை

எமது அன்புத் தெய்வம் தற்கொண்டவரைப் பேணியவர்- தன் உடன்பிறந்தவர்க்கு உதவியவர்- தான் பெற்றவரை சீராட்டியவர். எல்லார்க்கும் இனிய நல்லம்மாவாக வாழ்ந்தவர். அவரவர்க்கு ஏற்ப அறுசுவை உணவை ஆக்கிக் கொடுத்தவர். இன்று எம்மிடை எம் தெய்வம் இல்லை. ஆனால் அவரின் நினைவு நீங்காத நினைவே ஆகும்.

*- செல்லத்துரை குடும்பம்.*

இரானை வளவு,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(39588)(21.16.11)


# வடமாகாண ரீதியிலான

# மா பெரும் ட்டுவண்டில் சவாரிப்போட்டி



யாழ்.தீவகம் புளியங்கூடல் வாழ்மக்களின் அனுசரணையுடன் முல்லைத்தீவு விசுவமடுக்குளம் ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் சனசமூக நிலையம் பெருமையுடன் நடத்தும் வடமாகாண ரீதியிலான மாபெரும் மாட்டுவண்டில் சவாரிப்போட்டி.

**இடம்: விசுவமடு தொட்டியடி சவாரித்திடல்**

**காலம்: 11-09-2005 ஞாயிற்றுக்கிழமை**

**குறிப்பு: நான்கு பிரிவுகளாக நடைபெறும் [அ, ஆ, இ, ஈ]**

வடமாகாண அனைத்து மாவட்ட காளைகளையும் பங்குபற்றவைக்குமாறு கேட்டுக்கொள்வதோடு, சவாரிப்பிரியர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**விசுவமடுக்குளம் ஏற்று நீர்ப்பாசன விவசாயிகள் சனசமூக நிலையம்**



**விசுவமடு, முல்லைத்தீவு.** (39536)(50)



உங்கள் நாளாந்த தேவைகளுக்கு கை நிறைய கொண்டு செல்ல...

# இன்று கோலாகலமாக திறந்து வைக்கப்படுகிறது!



குளிரூட்டப்பட்ட

# சிட்டி சென்டர்

## சுப்பர் மார்க்கட்

இல.32, கச்சாய் வீதி, சாவகச்சேரி.
தொ.பே.: 077 3526899, Fax:021 222 5896.

CC CITY CENTRE Supermarket
*Shop to your satisfaction...*

தரமான பொருள்களை வழங்குவதில் நாம் பெருமையடைகிறோம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

Turkey BRAND · HAPPY COW · NESTOMALT · Nestlé NESPRAY · MILO · Mars · Fa · GIV · LASER · லக்ஸ்பிறே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புக்கு உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் மற்றொரு பகுதியினரின் பெயர்கள் இங்கு வெளியிடப்படுகின்றன.

உ/ 1512 திரு. சீனிக்குட்டி சுப்பிரமணியம்
உ/ 1522 திருமதி. சந்திரகாந்தியம்மா விஜயசிங்கம்
உ/ 1525 திரு. தம்பு சிவஞானசுந்தரம்
உ/ 1529 திரு. ஐயாத்துரை தம்பிராசா
உ/ 1532 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
உ/ 1533 திரு. கந்தையா தம்பிராசா
உ/ 1544 திரு. இளையதம்பி துரையப்பா
உ/ 1558 திரு. நாகலிங்கம் ஆறுமுகராசா
உ/ 1565 திரு. தம்பையா அரியரத்தினம்
உ/ 1566 திருமதி. அம்பிகாதேவி சிவப்பிரகாசம்
உ/ 1583 திரு. காசிப்பிள்ளை கணேசபிள்ளை
உ/ 1590 திருமதி. கமலாட்சி சரவணமுத்து
உ/ 1595 திரு. கந்தர் காசிப்பிள்ளை
உ/ 1598 திரு. குழந்தைத்தம்பி முருகையா
உ/ 1609 திரு. வயிரவிப்பிள்ளை நடராஜா
உ/ 1611 திரு. பொன்னு நடராசா
உ/ 1614 திருமதி. பூமணி நடராஜா
உ/ 1618 திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை
உ/ 1620 திரு. நன்னித்தம்பி பொன்னம்பலம்
உ/ 1623 திருமதி. புனிதவதிஅம்மா சண்முகராசா
உ/ 1625 திருமதி. பத்மாசினிதேவி சீவரத்தினம்
உ/ 1636 திரு. நடராசா இரத்தினராசா
உ/ 1637 திரு. தம்பையா சுந்தரம்பிள்ளை
உ/ 1640 திருமதி. சிவகாமிப்பிள்ளை இளையதம்பி
உ/ 1641 திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்
உ/ 1642 திரு. சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை திருஞானசெல்வம்
உ/ 1647 திரு. நமசிவாயம் சுந்தரலிங்கம்
உ/ 1650 திருமதி. சறோஜினிதேவி சுப்பிரமணியம்
உ/ 1651 திரு. கந்தையா செல்லத்துரை
உ/ 1657 திரு. நன்னித்தம்பி சண்முகநாதன்
உ/ 1668 திரு. பொன்னுத்துரை சிவகுருநாதன்
உ/ 1676 திரு. சுப்பிரமணியம் தருமலிங்கம்
உ/ 1680 திரு. சுப்பையா தட்சணாமூர்த்தி
உ/ 1685 திரு. கதிரப்பிள்ளை தம்பிமுத்து
உ/ 1686 திரு. செல்லர் தருமராசா
உ/ 1692 திரு. நாகலிங்கம் சந்திரசேகரம்
உ/ 1693 திருமதி. விசாலாட்சி சிவபாதசுந்தரம்பிள்ளை
உ/ 1698 திரு. சின்னத்தம்பி அரசரத்தினம்
உ/ 1702 திருமதி. அழகேஸ்வரி இரத்தினமகேசன்
உ/ 1707 திரு. வல்லிபுரம் பாலசிங்கம்
உ/ 1709 திரு. சின்னத்தம்பி பாலசிங்கம்
உ/ 1746 திரு. கதிரிப்பிள்ளை நடராசா
உ/ 1748 திரு. சின்னவி நாகமுத்து
உ/ 1751 திரு. தம்பு பொன்னுராஜா
உ/ 1754 திரு. தம்பு பூதப்பிள்ளை
உ/ 1756 திருமதி. புவனேஸ்வரி திருச்செல்வம்
உ/ 1759 திரு. கதிரிப்பிள்ளை இரத்தினம்
உ/ 1762 திரு. கந்தையா இராசரட்ணம்
உ/ 1781 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
உ/ 1784 திரு. செல்லையா செல்வரத்தினம்
உ/ 1789 திரு. செல்லையா சிவகுருநாதன்
உ/ 1793 திரு. இராசசிங்கம் சின்னத்துரை
உ/ 1795 திரு. தம்பியையா சிவஞானகுரு
உ/ 1803 திரு. செல்லர் சரவணமுத்து
உ/ 1811 திரு. சீனியப்பா சண்முகம்பிள்ளை
உ/ 1812 திரு. நாகமுத்து திருநாவுக்கரசு
உ/ 1813 திரு. அப்பாத்துரை துரைராசா
உ/ 1816 திரு. சின்னத்தம்பி தங்கலிங்கம்
உ/ 1840 திரு. செல்லப்பா அரியரத்தினம்
உ/ 1841 திரு. தில்லையம்பலம் அம்பலவாணர்
உ/ 1842 திரு. வேலாயுதர் அருளம்பலம்
உ/ 1844 திரு. தம்பிராசா அருமைநாயகம்
உ/ 1849 திரு. மயில்வாகனம் பாலசுப்பிரமணியம்
உ/ 1863 திரு. வீரவாகு ஐயாத்துரை
உ/ 1868 திரு. செல்லத்துரை கந்தசாமி
உ/ 1873 திரு. செல்லப்பா கதிர்காமத்தம்பி
உ/ 1878 திரு. சுப்பையா கந்தசாமி
உ/ 1882 திரு. விசுவலிங்கம் கனகசபாபதி
உ/ 1896 திருமதி. மகேஸ்வரி சின்னத்துரை
உ/ 1910 திருமதி. பத்மாவதி சுப்பிரமணியம்
உ/ 1911 திரு. வைரமுத்து நாகராஜன்
உ/ 1914 திரு. முத்தையா நடராசா
உ/ 1919 திரு. தம்பையா நவரத்தினம்
உ/ 1922 திரு. இராசரத்தினம் நல்லையா
உ/ 1923 திரு. ஐயாத்துரை நல்லையா
உ/ 1927 திரு. நாகலிங்கம் நடராசா
உ/ 1930 திரு. செல்லத்துரை பஞ்சலிங்கம்
உ/ 1936 திரு. கந்தையா பரமலிங்கம்
உ/ 1943 திரு. கந்தையா பொன்னுத்துரை
உ/ 1945 திரு. கந்தையா பஞ்சலிங்கம்
உ/ 1952 திரு. நாகமுத்து பொன்னுத்துரை
உ/ 1954 திரு. பொன்னம்பலம் பத்மநாதன்
உ/ 1959 திரு. பொன்னையா இராமுப்பிள்ளை
உ/ 1960 திரு. பெரியதம்பி இராசநாயகம்
உ/ 1961 திரு. கணபதிப்பிள்ளை நவரத்தினம்
உ/ 1976 திரு. இராசரத்தினம் இரத்தினம்
உ/ 2000 திரு. இரத்தினம் சுந்தரலிங்கம்
உ/ 2001 திரு. சந்தனப்பிள்ளை செல்லத்துரை
உ/ 2009 திரு. நாகலிங்கம் சிவசிதம்பரம்
உ/ 2021 திரு. செல்லையா சிவக்கொழுந்து
உ/ 2027 திரு. நாகமுத்து சின்னராசா
உ/ 2029 திரு. இராசையா சோதினாதன்
உ/ 2030 திரு. செல்லையா சுப்பிரமணியம்
உ/ 2033 திரு. கனகசபாபதிக்குருக்கள் சுப்பிரமணியஐயர்
உ/ 2046 திரு. தம்பிமுத்து சின்னராசா
உ/ 2058 திரு. அப்பாப்பிள்ளை திருநாவுக்கரசு
உ/ 2059 திரு. ஐயாத்துரை தியாகராசா
உ/ 2064 திரு. தாமோதரம்பிள்ளை வேலாயுதபிள்ளை
உ/ 2068 திரு. கந்தையா வேலாயுதபிள்ளை
உ/ 2077 திரு. கந்தையா வைத்தியநாதர்
உ/ 2081 திரு. வல்லி வடிவேலு
உ/ 2083 திரு. தம்பையா வடிவேலு
உ/ 2090 திரு. செல்லையா அப்புத்துரை
உ/ 2100 திரு. செல்லையா அந்தோனிப்பிள்ளை
உ/ 2115 திரு. கந்தையா இளையையா
உ/ 2120 திரு. அப்பாப்பிள்ளை காசிப்பிள்ளை
உ/ 2128 திரு. இளையதம்பி கண.பதிப்பிள்ளை
உ/ 2140 திரு. சுப்பையா நடராசா
உ/ 2149 திரு. சீனியர் நடராசா
உ/ 2150 திரு. அம்பலவாணர் நடராசா
உ/ 2151 திரு. கோவிந்தர் நாகையா
உ/ 2155 திரு. வீரசிங்கம் பொன்னம்பலம்
உ/ 2162 திரு. இளையதம்பி பரமநாதன்
உ/ 2164 திரு. சின்னையா பொன்னம்பலம்
உ/ 2165 திரு. கந்தவனம் பரமநாதன்
உ/ 2170 திரு. சின்னையா பூதப்பிள்ளை
உ/ 2177 திரு. தம்பாப்பிள்ளை இரத்தினம்
உ/ 2178 திரு. சுப்பிரமணியம் இராசையா
உ/ 2180 திரு. தம்பிமுத்து இரத்தினசிங்கம்
உ/ 2182 திரு. முருகேசு இராசரத்தினம்
உ/ 2183 திரு. கந்தையா இரத்தினம்
உ/ 2190 கந்தையா சிவலிங்கம்
உ/ 2193 திரு. சின்னத்தம்பி சிவஞானம்
உ/ 2195 திருமதி. சிவபாக்கியம் கனகரத்தினம்
உ/ 2201 திருமதி. செல்லமுத்து சின்னத்துரை
உ/ 2203 திரு. நாகலிங்கம் செல்வநாயகம்
உ/ 2220 திருமதி. சிவகங்கை சின்னத்துரை
உ/ 2235 திரு. மாணிக்கம் தம்பியையா
உ/ 2243 திரு. சின்னையா வல்லிபுரம்
உ/ 2250 திரு. கதிரேசு யோகர்
உ/ 2251 திரு. பொன்னையா இராசையா
உ/ 2253 திரு. கந்தையா விசுவலிங்கம்
உ/ 2262 திருமதி. மீனாட்சி நாகமுத்து
உ/ 2275 திரு. அப்புத்துரை செல்வநாயகம்
உ/ 2298 திரு. தாமோதரம்பிள்ளை சின்னத்துரை
உ/ 2320 திரு. சின்னத்துரை பூபாலன்
உ/ 2324 திரு. பொக்கன் சுப்பிரமணியம்
உ/ 2330 திரு. காசித்தம்பி சாந்தலிங்கம்
உ/ 2331 திரு. இராமு சீவரத்தினம்
உ/ 2337 திரு. கனகராஜர் ஜோகவனம்
உ/ 2343 திருமதி. இராசம்மா சுவாமிநாதர்
உ/ 2355 திரு. வீரசிங்கம் கந்தையா
உ/ 2359 திரு. இராமநாதர் நடராசா
உ/ 2365 திருமதி. பொன்னம்மா செல்வராசா
உ/ 2377 திரு. நமசிவாயம் திருநாவுக்கரசு
உ/ 2382 திருமதி. அன்னமுத்து தம்பிஐயா
உ/ 2392 திரு. முருகன் மாணிக்கம்
உ/ 2401 திரு. சின்னத்தம்பி இரத்தினம்
உ/ 2420 திரு. கந்தையா கதிரேசபிள்ளை
உ/ 2424 திருமதி. நாகம்மா தில்லையம்பலம்
உ/ 2430 திரு. சீனித்தம்பி இராசதுரை
உ/ 2434 திரு. சிவலிங்கம் செல்வதயாளன்
உ/ 2443 திரு. பொன்னம்பலம் சிவகுரு
உ/ 2444 திரு. இளையதம்பி சின்னப்பு
உ/ 2467 திரு. நல்லையா நவரத்தினம்
உ/ 2469 திருமதி. சிதம்பரம் கந்தையா
உ/ 2470 திரு. அரியகுட்டி இராசரத்தினம்
உ/ 2471 திரு. தம்பு தருமலிங்கம்
உ/ 2478 திரு. நல்லதம்பி சின்னையா
உ/ 2504 திரு. சின்னத்தம்பி பேனாட் சூசைப்பிள்ளை
உ/ 2513 திருமதி. பிறேம்றோஸ் ஜெயதேவி குணரத்தினம்
உ/ 2520 திரு. சங்கரப்பிள்ளை கனகலிங்கம்
உ/ 2521 திருமதி. நவமலர் கதிரமலைநாதன்
உ/ 2527 திரு. சரவணமுத்து குகநாகராசா
உ/ 2565 திருமதி. விசாலாட்சி துரைசிங்கம்
உ/ 2595 திருமதி. இரத்தினம் திருவிளங்கம்
உ/ 2601 திரு. இராமுப்பிள்ளை இராசரத்தினம்
உ/ 2612 திரு. முத்துக்குமாரு ஜெயராஜசிங்கம்
உ/ 2613 திரு. சின்னப்பு கண்ணுச்சாமி
உ/ 2615 திருமதி. குணபூபதி அரியரட்ணம்
உ/ 2627 திரு. சுப்பிரமணியம் நடராசா
உ/ 2632 திருமதி. தங்கம்மா சிவானந்தம்
உ/ 2635 திருமதி. விஜயலட்சுமி கந்தசாமி
உ/ 2644 திரு. முருகேசு சின்னத்தம்பி
உ/ 2655 செல்வி. கோகிலாதேவி இராசையா
உ/ 2667 திரு. கந்தவனம் சிவஞானசுந்தரம்
உ/ 2669 திரு. கதிர்காமு குணநாயகம்
உ/ 2670 திரு. கந்தையா பொன்னுத்துரை
உ/ 2685 திருமதி. எற்னாநவமணி பேரின்பநாயகம்
உ/ 2686 திருமதி. சிவபாக்கியம் வைத்திலிங்கம்
உ/ 2688 திருமதி. நல்லம்மா புஸ்பராசா
உ/ 2690 திரு. அருமைநாயகம் தயானந்தன்
உ/ 2698 திரு. கந்தையா பாலசிங்கம்
உ/ 2703 திரு. சின்னத்தம்பி கந்தையா
உ/ 2704 திருமதி. கமலாதேவி பரஞ்சோதி
உ/ 2706 திருமதி. மேரி யோசப்பின் அரியதாசன்
உ/ 2708 திரு. சின்னப்பொடி நடராசா
உ/ 2709 திரு. கதிர்காமர் நாராயணபிள்ளை
உ/ 2719 திருமதி. செல்வரத்தினம் சிவராமலிங்கம்
உ/ 2736 திருமதி. அமராவதி சின்னநயினர்
உ/ 2738 திரு. வைத்தி முத்தையா
உ/ 2746 திருமதி. செல்வச்சிரோன்மணி வைத்திலிங்கம்
உ/ 2750 திரு. சங்கரப்பிள்ளை கந்தையா
உ/ 2755 திரு. சின்னத்தம்பி சிவராசா
உ/ 2757 திரு. கார்த்திகேசஐயர் வைத்தியநாதஐயர்
உ/ 2759 திரு. வெற்றிவேலு பத்மநாதன்
உ/ 2762 திருமதி. விமலேஸ்வரி பத்மநாதன்
உ/ 2769 திரு. மருதப்பு கணேசு
உ/ 2772 திருமதி. தங்கம்மா குமாரசாமி
உ/ 2785 திரு. அழகக்கோன் பாலசிங்கம்
உ/ 2796 திருமதி. இராசமணி நல்லையா
உ/ 2801 திரு. கார்த்திகேசு தம்பிராசா
உ/ 2803 திரு. கனகசபை தியாகராசா
உ/ 2818 திரு. நடராஜா நகுலராஜ்
உ/ 2827 திரு. [illegible]
உ/ 2836 திரு. அப்பச்சி முருகையா
உ/ 2837 திரு. கணபதி செல்லையா இராசையா
உ/ 2844 திரு. சின்னையா சிவநாதன்
உ/ 2846 திரு. இரத்தினம் சாம்பசிவம்
உ/ 2859 திருமதி. லிடியா இராசமணி தம்பு
உ/ 2864 திரு. நாகமுத்து சின்னத்துரை
உ/ 2869 திரு. பொன்னையா தம்பித்துரை
உ/ 2871 திரு. சபாரத்தினம் பரமேஸ்வரன்
உ/ 2872 திரு. செல்லப்பா நாகலிங்கம்
உ/ 2876 திரு. சின்னத்தம்பி தெய்வேந்திரம்
உ/ 2890 செல்வி. சந்திரவதனா குலசேகரம்
உ/ 2898 திரு. வைத்தீஸ்வரஐயர் யோகீஸ்வரன்
உ/ 2908 திருமதி. தங்கம்மா இராசேந்திரம்
உ/ 2911 திரு. தம்பிமுத்து நவரட்ணராஜா
உ/ 2920 திரு. சிவசம்பு நடராஜா
உ/ 2929 திரும்தி. ஞானபூங்கோதை சிவஞானம்
உ/ 2933 திருமதி. நேசமலர் யோகரத்தினம்
உ/ 2938 திரு. பொன்னையா துரைராசா
உ/ 2955 திரு. சீனிவாசகம் பரராசசிங்கம்
உ/ 2967 திருமதி. பூமலர் பொன்னம்பலம்
உ/ 2972 திரு. விசுவநாதஐயர் பரமேஸ்வரன்
உ/ 2975 திருமதி. பற்குணமலர் பாலசுப்பிரமணியம்
உ/ 2981 திரு. தட்சணாமூர்த்தி ஆறுமுகசாமி
உ/ 2992 செல்வி. வசந்தநாயகி செல்லத்துரை
உ/ 2995 திருமதி. சரஸ்வதி பராசசிங்கம்
உ/ 2996 திரு. சின்னத்தம்பி குலத்துங்கம்
உ/ 3000 திரு. தம்பு சுவாமிநாதன்
உ/ 3001 திருமதி. தெய்வநாயகி சண்முகநாதன்
உ/ 3005 திருமதி. மகேஸ்வரி இரத்தினசிங்கம்
உ/ 3029 திரு. இளையதம்பி சரவணமுத்து
உ/ 3031 திருமதி. சிவகாமசுந்தரி கதிரவேலு
உ/ 3032 திரு. நாகமுத்து பொன்னுத்துரை
உ/ 3035 திரு. செல்லையா செல்வராசா
உ/ 3038 திரு. நாகராசா தியாகராசா
உ/ 3056 திரு. வீரவாகு கனகசபாபதி
உ/ 3062 திரு. வல்லி!ரம் பரராசா
உ/ 3067 திரு. சீனியர் மயில்வாகனம்
உ/ 3076 திரு. இராமு இராசதுரை
உ/ 3092 திரு. செல்லத்துரை பூபாலசிங்கம்
உ/ 3094 திரு. வயித்திலிங்கம் சுப்பிரமணியம்
உ/ 3095 திரு. வல்லிபுரம் சதாசிவம்
உ/ 3101 திரு. கந்தையா நடராசா
உ/ 3103 திருமதி. இரத்தினம் தம்பிஐயா
உ/ 3120 திரு. முருகேசு பரமலிங்கம்
உ/ 3121 திருமதி. தெய்வானைப்பிள்ளை செல்லையா
உ/ 3128 திருமதி. சீதாலட்சுமி காசிப்பிள்ளை
உ/ 3129 திருமதி. கனகேஸ்வரி தேவராசா
உ/ 3131 திரு. இளையதம்பி தம்பையா
உ/ 3153 திருமதி. சரஸ்வதி கந்தசாமி
உ/ 3155 திரு. சீனிவாசகம் கனகரத்தினம்
உ/ 3169 திருமதி. இராஜேஸ்வரி மார்க்கண்டு
உ/ 3180 திரு. சின்னக்குட்டி இரத்தினசிங்கம்
உ/ 3207 திருமதி. நாகேஸ்வரி சிவசம்பு
உ/ 3223 திரு. செல்லையா துரைராசா
உ/ 3235 திருமதி. செல்வராசாத்தி ஆனந்தநாயகம்
உ/ 3239 திரு. முதலித்தம்பி தம்பிஐயா
உ/ 3241 திருமதி. இரத்தினம் நவரத்தினம்
உ/ 3247 திருமதி. பஞ்சவர்ணம் இரத்தினம்
உ/ 3251 திரு. அப்பாக்குட்டி செல்வரத்தினம்
உ/ 3269 திருமதி. புஷ்பமலர் கணேசன்
உ/ 3293 திரு. மங்கயற்கரசி தம்பிராசா
உ/ 3323 திரு. தில்லையம்பலம் இராசையா
உ/ 3334 திருமதி. காந்தரூபி சுப்பிரமணியம்
உ/ 3340 திருமதி. ரட்ணபூபதி பற்றிக்
உ/ 3353 திரு. விசுவநாதர் குசலவன்
உ/ 3362 திரு. கணபதிப்பிள்ளை கந்தையா
உ/ 3369 திருமதி. தங்கம்மா கந்தையா
உ/ 3373 திரு. முத்து தம்பிப்பிள்ளை
உ/ 3375 திரு. கணபதி நாகலிங்கம்
உ/ 3382 திருமதி. கனகமணி இராமலிங்கம்
உ/ 3388 செல்வி. சோதிமலர் சின்னத்தம்பி
உ/ 3423 திரு. வைத்திலிங்கம் செல்லையா
உ/ 3424 திருமதி. செல்லம்மா மார்க்கண்டு
உ/ 3442 திரு. ஆறுமுகம் இராஜேந்திரம்
உ/ 3443 திரு. பொன்னு சின்னமணி
உ/ 3446 திரு. க.சண்முகம் சாம்பசிவம்
உ/ 3450 திருமதி. நல்லம்மா ஐயாத்துரை
உ/ 3451 திருமதி. பூவதி கிருஷ்ணன்
உ/ 3456 திருமதி. மரியம்மா அருளானந்தம்
உ/ 3461 திருமதி. குட்டிப்பிள்ளை சின்னப்பு
உ/ 3468 திரு. கந்தசாமி காசிலிங்கம்
உ/ 3469 திரு. சின்னையா பாலசிங்கம்
உ/ 3500 திருமதி. தங்கரத்தினம் சின்னத்துரை
உ/ 3502 திரு. செல்லர் வீரசிங்கம்
உ/ 3503 செல்வி. தர்மினி குமாரசுவாமி
உ/ 3509 திருமதி. எலிசபெத் இராசேந்திரம்
உ/ 3512 திரு. வேலுப்பிள்ளை நவரத்தினராசா
உ/ 3514 திரு. சின்னையா அமிர்தலிங்கம்
உ/ 3515 திரு. செல்லப்பா கதிரவேலு
உ/ 3522 திரு. விஸ்வலிங்கம் மகாலிங்கம்
உ/ 3525 திருமதி. யோகராணி நடராசா
உ/ 3526 திரு. சின்னையா துரைராசா
உ/ 3533 திரு. சண்முகம் வேலும் மயிலும்
உ/ 3544 திருமதி. சிவபாக்கியம் வேலாயுதபிள்ளை
உ/ 3546 திரு. வல்லிபுரம் சுப்பிரமணியம்
உ/ 3547 திரு. முருகன் பொன்னு
உ/ 3555 திருமதி. கமலேஸ்வரி முருகையா
உ/ 3561 திரு. சின்னையா தியாகரஜா
உ/ 3563 திரு. நாகலிங்கம் முத்தையா
உ/ 3569 திரு. இராமுப்பிள்ளை திருநாவுக்கரசு
உ/ 3570 திரு. சரவணைமுத்து கிருஷ்ணபிள்ளை
உ/ 3575 திரு. போல்கிறிஸ்மஸ்பிலிப்பையா ஞானதுரை
உ/ 3582 திரு. காாத்திகேசுசெல்லையா நடராசா
உ/ 3583 திருமதி. சுந்தரா சிங்கம்
உ/ 3589 திரு. வல்லிபுரம் நடராசா
உ/ 3590 திரு. கதிரவேலு நடராசா
உ/ 3594 திரு. முத்தையா சோமசுந்தரம்
உ/ 3606 திரு. செல்லத்துரை சின்னராசா

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவரின் தொல்லை நீடிப்பு; வடமராட்சி கடற்றொழிலாளர் சிரமம்

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு தொடர்வதால் நாளாந்தம் வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் பாதிப்படைந்த வண்ணம் உள்ளனர். கடந்த வியாழக்கிழமை இரவு இதேகுற்பரப் பில் மீன்பிடிப்பதற்காகக் கடலில் வலைகளை வீசிவிட்டுப் படகில் காத்திருந்த இன்பருட்டிப் பகுதியைச் சேர்ந்த இரு மீனவர்களின் வலைகளை இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் அறுத்துச் சென்றுள்ளன.

இதனால், இந்த மீனவர்கள் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இழந்ததோடு, எதிர்காலத்தில் வலைகளின்றி தொழில் செய்ய முடியாதநிலையும் உருவாகியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்திடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-173)

# மாமுனைவீதி பலத்த சேதம்

கரவெட்டி, செப்.5

வடமராட்சி கிழக்கு மாமுனை வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.

ஆழிப்பேரலை பாதிக்க முன்னர் மேற்படி வீதி சேதமடைந்திருந்தது என்றும் -

ஆனால், ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து குறிப்பிட்ட வீதி மேலும் பலத்த சேதமடைந்துவிட்டது என்றும்- தெரிவிக்கப்பட்டது.


இதற்கிடையில் -

மருதங்கேணிச்சந்தியில் இருந்து மாமுனைக்குச் செல்லும் இந்தப்பிரதான வீதி ஊடாகப் பயணிக்கும் வாகனங்கள் அடிக்கடி சேதமடைகின்றன என்றும்-

இவ் வீதியால் பிரயாணம் பயணிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (எ-70)



## ஓராண்டு நினைவுகளில்....



### அமரர் இராமநாதன் நாகராசா

மலர்வு 29-03-1963
உதிர்வு 17-08-2004

அன்புள்ள ராஜா என்று
அழைக்கின்ற போது எல்லாம்
இன்பமாய் எதிரில் தோன்றி
என்னம்மா என்று கேட்பாய்
துன்பமாம் உனக் கென்றுள்ளம்
என்பெலா முருக நீயும் எவ்விடம் சென்றாயே

ஆண்டு ஒன்றாக அல்லலுற்று அலைகின்றோம்
ஈண்டும் நாம் உன்னை அழைக்கின்றோம்- மீண்டும்
வந்திடையா எங்கள் வண்ணத் திருமகனே!
தந்திடையா உம்மை எமக்கு!

யாவில் வீதி,
ஆனைக்கோட்டை. (39611)(46-14-45)

மனைவி,மக்கள்.

## சமாதான வாரம் 15.09.2005 - 21.09.2005

*"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி"*

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் எதிர்வரும் புரட்டாதி மாதம் 21ஆம் திகதியைச் சர்வதேச சமாதான தினமாகப் பிரகடனப படுத்தியதை யாவரும் அறிந்ததே. இதை முன்னிட்டு கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள **சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திறகுமான நிறுவனம** புரட்டாதி மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரையிலான நாள்களை சமாதான வாரமாக அனுஷ்டிக்கவுள்ளது. இச்சமாதான வாரத்தையொட்டி மேற்படி நிறுவனத்தால் கட்டுரை, கவிதை, சுவரொட்டி போன்ற போட்டிகளும், சமாதானம் சம்பந்தமான கருத்தரங்குகளும், சமாதானம் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்தும் முகமாகப் பாடசாலைகளில் கொடி (Badges) விநியோகிக்கும் செயற்பாடுகளும், இறுதியாக 21ஆம் திகதி திருமறைக் கலாமன்றத்தில் கலை நிகழ்வுகள (Cultural Programmes) என்பனவும் நடாத்தப்படவுள்ளன. எனவே, அனைத்து மக்களையும் மேற்படி சமாதான நிகழ்வுகளில் கலந்துகொண்டு சமாதானத்திற்கான உங்கள் பங்களிப்பை நல்கும்படி அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

### போட்டிகள்

**01- கட்டுரைப் போட்டி.**

இப்போட்டியானது மூன்று வயதுப்பிரிவுகளில் நடத்தப்படும்.

| பிரிவு | வயதெல்லை | தலைப்புக்கள் | சொற்கள் |
|---|---|---|---|
| 01 | 11-14 வரை | 01-சிறுவர்களின் வளர்சியில் சமாதானச் சூழலின் முக்கியத்துவம்.<br>02- சமாதான தினம் | 250 |
| 02 | 15-16 வரை | 01- நாட்டின் தற்போதைய நிலையும் சமாதானத்தின் தேவையும்<br>02- இன்றைய சூழ்நிலையில் சமாதான தினத்தின் முக்கியத்துவம். | 500 |
| 03 | 17-25 வரை | 01- சமாதானத்தை உருவாக்குவதில் எனது பங்களிப்பு<br>02- சமாதானத்தை உருவாக்குவதில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள்<br>03- யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் வன்முறைகள் | 1000 |

உங்களுடைய ஆக்கங்களுடன் உங்களுடைய வயதை உறுதிப்படுத்துவதற்கான பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**02- கவிதைப் போட்டி**

கவிதைப் போட்டியானது சமாதானம் என்னும் தொனிப்பொருளில் 15 வரிகளிற்கு மேற்படாதவாறு எழுதப்படுதல் வேண்டும். இப்போட்டிக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**03- சுவரொட்டிப் போட்டி**

சுவரொட்டிகள் யாவும் எமது நாட்டின் தற்போதைய சமாதான நிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாக 42cmx32cm அளவுள்ள Bristal Board இல் வரையப்படல் வேண்டும். இப்போட்டிக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**நிபந்தனைகள்:**

01- போட்டியாளர்கள் தங்களுடைய ஆக்கங்களுடன் பெயர், முகவரி என்பவற்றைத் தெளிவாக அனுப்பிவைக்க வேண்டும்.

02- நிறுவனத்தில் தன்னார்வப்பணியாளர்களாக(Volunteers) இருப்பவர்கள் போட்டிகளில் பங்குகொள்ள முடியாது.

03- உங்கள் ஆக்கங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 15-09-2005. உங்களுடைய ஆக்கங்களை **சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், இல.8 குருசோ வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

04- தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கான பரிசில் விபரம்:
முதலாம் பரிசில்: ரூபா 3000.00
இரண்டாம் பரிசில்: ரூபா 2000.00
மூன்றாம் பரிசில்: ரூபா 1000.00

05- தெரிவுசெய்யப்படும் போட்டியாளர்களுடைய பெயர் விவரங்கள் 21-09-2005 அன்று உதயன், ஈழநாடு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். இவர்களுக்கான பரிசில்கள் 21-09-2005 அன்று திருமறைக்கலாமன்றத்தில் நடைபெறவுள்ள சமாதான வாரத்தின் இறுதி நாள் நிகழ்வில் வைத்து வழங்கப்படும்.

(39597)(46-14-45)

**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம், இல.8 குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்**
தொடர்புகளுக்கு 021 222 8131.

## யாழ் ரெக்

இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி
கலட்டிச் சந்தி

புதியபிரிவுகள் 10,12,16 ஆம் திகதிகளில் ஆரம்பமாகின்றன

கிரா஀பிக் & வெப் டிசைன்
மல்ரிமீடியா
3டி ஸ்ருடியோ மெக்ஸ்
மாயா, ப்ளாஷ் ஸ்கிரிப்ட்
வீடியோ மிக்ஸிங்

இதுவரை யாழில் கற்பிக்கப்படாத பல புதிய மென்பொருட்கள் மற்றும் பதிப்புக்களை உள்ளடக்கிய கற்கைநெறிகள்...

Online Classes

50%

இந்தியாவில் பயிற்சிபெற்ற கொழும்பின் முன்னணி ஆசிரியர்கள் வருகை தரவுள்ளார்கள்

மல்ரிமீடியா மற்றும் அனிமேஷன் துறைகளில் கடந்த காலங்களில் பல சாதனைகளை புரிந்துள்ள வெள்ளவத்தை லண்டன் இன்஀போ ரெக் இன் இணை நிறுவனமான யாழ் ரெக் ஏற்கனவே இரண்டு பிரிவுகளை ஆரம்பித்துள்ள நிலையில் மூன்றாவது பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

## யாழ் ரெக்

இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி
கலட்டிச் சந்தி

ஆரம்பமாகின்றன

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சிறந்த நிறுவனங்களில் எமது நிறுவனத்தின் சிபாரிசுடன் சிறந்த தொழில்வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான கற்கைநெறிகள்

Professional Diploma in DTP & Graphic Design
மாதாந்த பயிற்சிக்கட்டணம்: 3000/-

Professional Diploma in Multimedia & Film Technology
மாதாந்த பயிற்சிக்கட்டணம்: 4500/-

Professional Diploma in 3D Modeling & Animation Tech.
மாதாந்த பயிற்சிக்கட்டணம்: 6000/-

ஆறு மாதகால முழுநேர (10.00-5.00 மணிவரை) பயிற்சியுடன் கூடிய கற்கைநெறி

தெரிவுசெய்யும் ஒவ்வொரு கற்கைநெறிக்கும் கம்ப்யூட்டர் ஹாட்வெயார் கற்கைநெறி இலவசமாக பயிற்றுவிக்கப்படும்

ஒரு கற்கைநெறியானது மூன்றிற்கு மேற்பட்ட நிபுணத்துவ தரச் சான்றிதழ்களை வழங்கும்

உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
[illegible]
பயிற்சி இலவசமாக வழங்கப்படும்

## யாழ் ரெக்

இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி
கலட்டிச் சந்தி

யாழ் ரெக் நிறுவனத்தின் ஆரம்பத்தை முன்னிட்டு வழங்கப்படும்.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2005
ஆரம்பம்:10-09-2005 முடிவு:10-10-2005

கற்கைநெறி ஒன்றிற்கு ரூ.1500/- மட்டுமே கட்டணமாக அறவிடப்படும்.

எம். எஸ். ஒ஀பீஸ்
ரைப்செட்டிங்
கிரா஀பிக் டிசைன்
வெப் டிசைன்
மல்ரிமீடியா
வீடியோ மிக்ஸிங்
2டி & 3டி அனிமேஷன்
ஹார்ட்வெயார் என்ஜினியரிங்

அனைத்து கற்கைநெறிகளும் அடிப்படையோடு சார்ந்ததாக நடாத்தப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் மேலதிக கற்கைநெறிக்கான சலுகைகள் வழங்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்கள் தம் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்த முயல்தல் வேண்டும்



## திருமறைக் கலாமன்ற நிகழ்வில் நீதிபதி விக்னராஜா அறிவுரை

இன்றைய இளைஞர், யுவதிகள் பரிபூரண மாக மனிதநேயமுள்ள பிரஜைகளாக வளர வேண்டுமானால் அதற்குப் பணம் தேவை யில்லை, பொருள் தேவையில்லை, உங்கள் மனங்களில் உள்ள ஆன்மீக உணர்வினை வெளிப்படுத்த முயற்சி எடுக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் 40 ஆவது வருட நிறைவையொட்டி நடைபெற்ற கலைச்சங்கமம் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைச் சங்கமம் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு அண்மையில் திருமறைக் கலாமன்ற அரங்கில் யாழ்.மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமது உரையை நிகழ்த்திய யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தொடர்ந்து தமது உரையில் தெரிவித்ததாவது:-

திருமறைக் கலாமன்றம் கலையை ஆயுத மாகத் தேர்ந்தெடுத்து மனிதநேயத்தை மனி தனது மனதிலுள்ள ஆன்மீகத்தை வெளிக் கொணர சரியாகப் பயன்படுத்தி வருகின்றது. இன்று மனிதநேயம் அருகிப் போவதற்கு என்னைப் பொறுத்தவரை சமயங்களின் முக்கியத்துவம் மருகி வருவதே காரணம் என நம்புகிறேன்.

சமயம் என்பது மக்களை நல்வழிப்படுத்த மனிதர்களை ஏனைய உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தி மனித நேயத்துடன் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட ஒரு தத்துவம். அது எந்தச் சமயமாக இருந்தாலும் அதை ஆழமாக அதன் தத்துவங்களையும் கொள்கைகளையும் ஆழ்ந்து படித்தால் அது அன்பைப் போதிக்கிறது. அத்துடன் மற்றவர்களுக்கு சுயநலமின்றி அன்பைச் செலுத்தி சேவை செய்ய வலியுறுத்துகிறது. இதிலேதான் எங்களுடைய தமிழ்மொழி, தமிழ்க் கலாசாரம் சகல சமயங்களையும் இணைக்கிறது.

சமயம் என்று சொல்லும்போது எந்தச் சமயமாக இருந்தாலும் அதன் தத்துவம், அதன் கொள்கைகளை நன்கு புரிந்தால் தமிழரது பாரம்பரியம் வெளிவரும். எல்லாச் சமயங்களும் மற்றவர்களிடம் அன்பாக இரு என்று தான்சொல்கின்றன. அன்பாகச் சேவை செய்யும்போது அதை இறைவனுக்கு அர்ப்பணியென்று சொல்லப்படுகிறது. சேவை செய்தல் என்ற விடயம் கடமையைச் சார்ந்ததாக தோற்றம் பெறுகிறது. எனவே பெரியோர் மட்டுமல்ல முக்கிமாக இளைஞர்களும் யுவதிகளும் தாம் எந்தத் தொழிலைச் செய்தாலும் எந்த ஸ்தாபனத்தில் எந்தத் துறையில் தொழில் செய்தாலும் அந்தக் கடமையைச் சரிவரச் செய்தால் மனிதநேயத்தை உருவாக்க அது பெரும் பங்களிக்கும்.

இளைஞர்களும் யுவதிகளும் வீதிகளில் அநியாயமாக நேரத்தைச் செலவிட்டு தமது வாழ்வைச் செழிப்பாக்கத் தவறுவது மட்டுமல்லாது ஏனையோர்களுக்கும் கஷ்டத்தை விளைவிப்பதை அன்றாடம் பல வடிவங்களில் பத்திரிகைகளில் வாசிக்கிறோம். அது வீதி விபத்தாக இருக்கலாம். சமாந்தரமாகச் சென்ற காரணத்தால் கஷ்டங்களைப் பெறுவதாக இருக்கலாம்.

ஆனால் நான் அன்பாக இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கூறுவது நீங்கள் பரிபூரண மாக மனிதநேயமுள்ள பிரஜையாக சமுதாயத்தில் வரவேண்டுமானால் பணம் தேவையில்லை; பொருள் தேவையில்லை. உங்கள் மனதிலுள்ள ஆன்மீகத்தை வெளிக்கொணர முயற்சி எடுக்கவேண்டும் என்று கூறினார்.

இளைஞர்கள், யுவதிகள் இன்றைய கலாசார நாகரிக சூழ்நிலையில் தமது எல்லையை நிர்ணயித்துகொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். பயிற்சி பெற்றுக்கொள்ளவேண்டும். பலர் சமயங்கள் எடுத்தியம்பும் கதைகளையும் காப்பியங்களையும் கேலி செய்வதில் நேரத்தைப் போக்குகிறார்கள். ஆனால் நான் கூறியதுபோல பணமும் தேவையில்லை; பொருளும் தேவையில்லை. ஆண்டவன் தந்த அறிவு இளைஞர், யுவதிகளே உங்களிடம் உள்ளது. அதனை இலவசமாக வாசகசாலை, நூல்நிலையங்களுக்குச் சென்று சமயக் காப்பியங்களையோ புத்தகங்களையோ வாசித்து அந்தப் புத்தகங்களின் கதைகளில் உள்ள கருத்துக்களை உள்வாங்கி உங்கள் மனதைப் பண்படுத்தி, ஆன்மீகத்தை வளரச் செய்து மனித நேயமுள்ள பிரஜைகளாக சமுதாயத்தில் வாழ நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் - என்றார்.

# ஆசிரியர்களுடைய சேவையை கௌரவிக்கும் போது பாடசாலைச் சாதனைகள் அதிகரிக்கின்றன



வலி.தெற்கு,செப்.5

''ஆசிரியர்களுடைய ஈடுபாடு அர்ப்பணிப்பும் கௌரவிக்கப்படுகின்ற போது பாடசாலைகளின் சாதனைகள் அதிகரிக்கின்றன. அதிபர், ஆசிரியர்களின் கவனமும் கண்காணிப்பும் மாணவர்களுடைய கற்றலில் திரும்புகிறது.''

இவ்வாறு கூறினார் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பா.தனபாலன்.

யாழ்.ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற உள்ளகபயிற்சி ஆசிரியர் எஸ்.கோகிலதீபனின் மகிழ்ச்சிகரமான செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றும்போது கூறியதாவது:-

வட மாகாணத்தில் விரைவாக வளர்ச்சியடைந்த ஆரம்ப பாடசாலையாக இது விளங்குவதற்கு பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடைய ஒருங்கிணைந்த சேவையே காரணம்.

பாடசாலையின் தேவைகளையும் குறிக்கோள்களையும் திட்டமிடும்போது பெற்றோர்கள், சமூகத்தவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் அவற்றை வெற்றி பெறச் செய்யலாம். இவ் வழியில் இயங்கியமையால்தான் இப் பாடசாலை வினைத்திறனும்- விளைத்திறனும் கொண்டு விளங்குகிறது.

பாடசாலைகள் பலவும் பல சவால்களை எதிர்நோக்கி உள்ளன. கற்றல்- கற்பித்தலை ஒழுங்குபடுத்தல், முறையான முகாமைத்துவத்தை கட்டியெழுப்புதல், மனித -பௌதிக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல் போன்றவற்றை தடுக்கும் செயற்பாடுகள் பிழையான விளக்கங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளை சுயமாக இயங்கவிடாமை அதிகரித்துள்ளது. இவை கல்விச் சீர்குலைவை ஏற்படுத்துகின்றன. இக்குறைபாடுகளை நீக்கி அபிவிருத்தி முகாமையாளர்களாக அதிபர்கள் விளங்கவேண்டும்.

மாணவர்களை எதற்கும் உதவாதவர்கள் எனக் கூறி ஒதுக்காமல் அவர்களது நலிவுகளை இனங்கண்டு பரிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். நோயாளிகளை வெளியேற்றி விட்டு சுகதேகிகளை தங்கவைக்கும் வைத்தியசாலைகளாக பாடசாலைகள் மாறக் கூடாது.

ஆனைக்கோட்டை மெ.மி.த.க. பாடசாலை அதிபர் எஸ்.சோமேஸ்வரன், உள்ளக பயிற்சி ஆசிரியர் எஸ்.கோகில தீபன் ஆகியோரும் உரையாற்றினர். (ப-152-204)




# சமயக் கருத்துக்களை வெளியிடுவதற்கு தமிழ்மொழி நல்ல ஊடகமாக திகழ்கிறது



குருநகர்,செப்.5

சமயக் கருத்துக்களை வெளியிடுவதற்கு தமிழ்மொழி நல்ல ஊடகமாகத் திகழ்கிறது என்று கூறினார் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ்.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைச்சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் உரைநிகழ்த்தினார். கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. ஜோன்சன் ராஜ்குமார் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெற்றது. பேராசிரியர் சண்முகதாஸ் மேலும் கூறியதாவது:-

நாங்கள் எல்லோரும் மொழியால் ஒன்றுபடுகிறோம். எமது மொழி தமிழ்மொழி. இம்மொழியினுடைய மிகச்சிறந்த பண்பு என்னவென்றால் இந்த மொழியோடு எந்த சமயங்கள் வந்து சேர்ந்தனவோ அவைதம் கருத்துக்களை சிறப்பான விழுமியங்களை வெளிப்படுத்துவதற்கு நல்ல ஊடகமாக அமைந்திருக்கின்றது.


பௌத்த சமயத்துக்கு ஒரு மணிமேகலையும், சமணசமயத்துக்கு ஒரு சீவக சிந்தாமணியும், சைவசமயத்துக்கு ஒரு பெரிய புராணமும், வைஸ்ணவ சமயத்துக்கு ஒரு கம்பராமாயணமும், கத்தோலிக்க சமயத்துக்கு பெஸ்கி அமைத்துத்தந்த தேம்பாவணி என்ற காவியமும், கிறிஸ்தவ சமயத்துக்கு இரட்சணிய யாத்திரிகம் என்ற காவியமும் இவ்வாறு அடுக்கிக் கொண்டுபோகலாம். இதனால்தான் எங்களுடைய வணக்கத்துகுரிய தமிழ் அறிஞர் பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் சொன்னார் பக்தியின் மொழி தமிழ்மொழி என்று. காலமன்றம் எங்களது கலை, பண்பாடு ஆகியவற்றை இந்த மண்ணிலே போற்றி வளர்த்தது. பிறநாடுகளிலும் எங்களது கலையினுடைய பெருமையினையும் சிறப்பினையும் நுணுக்கங்களையும் கொண்டு சென்று அங்கே பரப்பியது. தூது சென்ற தனி நாயகம் அடிகளாரைப் போல கலைத்தூது சென்ற எங்களுடைய அன்பிற்குரிய மரிய சேவியர் அடிகளாரும் அவருக்குப்பின்னால் நின்ற இந்த இளைஞர்களும் இந்தக் கழகத்தினது வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளனர். திருமறைக் கலாமன்றம் இந்த மண்ணிலே செய்து வருகின்ற பணி தமிழ் மொழியினூடாக கலை, பண்பாடு போற்றுகின்ற ஒரு பெரிய பணியாக உள்ளது என்றார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திருமறைக் கலாமன்றத்தின் வரலாற்றைச் சித்திரிக்கும் கலைச்சுடர் இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டது இதன் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க, யாழ்.பொதுசன ஒன்றியங்களின் தலைவர் சொ.கு.சிறில் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து திருமறைக் கலாமன்றத்தின் கலைச் சேவைக்கு ஆரம்பம் தொடக்கம் ஆற்றிய சேவைக்காக இம் மன்றத்தைச் சேர்ந்த 22கலைஞர்கள் பாராட்டி, பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப் பட்டார்கள். (ப-51-204)

# மாணவர்களை ஆசிரியர்கள் தடிகொண்டு அடிப்பது குற்றமாகும்

## அன்பினால் திருத்துவதே சிறப்பு என்கிறார் மல்லாகம் நீதிபதி



மாணவர்களை ஆசிரியர்கள் தடிகொண்டு தண்டிப்பது குற்றமாகும். உடலில் ஊறு ஏற்படாதவாறு தண்டனை வழங்கலாம். அன்பாகப் பழகிவழிநடத்துவதே சிறந்த வழி என்று தெரிவித்தார்மல்லாகம்மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன்.

இணுவில் மத்திய கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவளவிழாவில் கலந்துகொண்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் உரையாற்றினார்.

இணுவில் மத்தியகல்லூரி அதிபர் துரை எங்கராசு தலைமையில் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் விழா நடைபெற்றது.

மாவட்டநீதிபதி தமது உரையின் போது மேலும் கூறியதாவது: கல்விதான் எம்மை உயர் நிலைக்கு கொண்டுவருகிறது. கல்வியை ஊட்டிய எம் ஆசிரியர்களை நாம் எப்போதும் நினைவு கூர்ந்து பாராட்டவேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களை தடி கொண்டு தண்டிப்பது குற்றமாகும். தண்டனைகள் பல வழிகளில் வழங்கப்படலாம். உடலில் ஊறு ஏற்படாத வகையில் தண்டனை வழங்கப்படலாம்.அடிகொடுத்து திருத்துவதை விட அன்பாக வழி நடத்தி மாணவர்களை திருத்தலாம். கண்டிப்பு மிக்க பார்வை மூலமாகவும் திருத்தலாம்.

ஒரு பாடசாலையின் மகிமை அதன் அதிபர், ஆசிரியர்களில் தங்கி உள்ளது. மாணவர்களின் திறமைக்கு பெற்றோர், மாணவர்களின் ஊக்கம் மட்டுமல்ல; அதிபர், ஆசிரியர்களின் ஊக்கமும் காரணமாகின்றது. செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கமைய ஆசியர்கள் திறமையுடன் செயற்படாமல் மாணவர்கள் தனியார் கல்விக் கூடங்களை நாடத்தேவையில்லை. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு கல்வியில் சுமையை ஏற்படுத்தக்கூடாது. பாடசாலை, ரியூட்டரி என்று எந்நேரமும் அலையவிடாது பாடசாலையில் படித்ததை காலையில் எழுந்து படிக்கச் செய்யவேண்டும்.

சமீபகாலமாக மாணவர்களுடைய பழக்கங்கள் ஒழுக்கம் இன்றி காணப்படுகின்றன. வீதிகளில் நின்று பல சேட்டைகள் புரிகிறார்கள். நகரத்தை அண்டிய பகுதிகளில்தான் இந்த நிலை அதிகரித்துக் காணப்படுகிறது. இதனை மாற்றி அமைக்கவேண்டும். பெற்றோர்கள் இதில் கூடிய பங்குகொள்ள வேண்டும். பிள்ளைகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுக்காமல் அவர்களுக்கு அவசியமானவற்றை வாங்கி கொடுக்க வேண்டும். கஷ்டங்களை உணரவைக்கவேண்டும். ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க அதிபர், ஆசிரியர், பெற்றோர் இணைந்து முயற்சிக்க வேண்டும்- எனக் கூறினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய ஆசியுரையில், விஞ்ஞானம் வளர்ந்து விட்டது. அறிவு கூடி விட்டது என எண்ணிக் கொண்டு நாம் செய்வதெல்லாம் சரி என கொள்ளக் கூடாது. எமக்குப் பின்னாலே நிறைவான பல செயற்பாடுகள் உண்டு. அவற்றைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் செயற்பட்டால் இன்று இந்த அதிபர், ஆசிரியர்கள் பெற்றுக் கொண்ட சிறப்பும் பாராட்டும் உங்களுக்கும் கிடைக்கும் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் தமது உரையில், ஆசிரியர்கள் மலை போலவும் மலர் போலவும் விளங்குகிறார்கள். ஆசிரியர்களை மாணவர் மதிப்பதில்லை என்ற கூற்றை நான் ஏற்க மாட்டேன். நல்ல ஓர் ஆசிரியன் ஒரு போதும் சோடைபோகமாட்டான். பிள்ளைகள் மனதில் என்றும் நிலைத்திருப்பான் என்பதை பாடசாலைகளில் அனுபவம் மூலம் நாம் காணலாம். தங்களுடைய பாரம்பரியம், பண்பாடுகளுக்கமைய இன்று மாணவர்கள் தமது ஆசிரியர்களை கௌரவித்துள்ளது பெருமைக்குரியது- எனக் கூறினார்.

வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கு.சண்முகநாதன், பேராசிரியர் சபா. ஜெயராசா, கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினார்கள். (ப- 152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்



மணவாளக் கோல உற்சவம்

ஆவணி மாதம் 21 ஆம் நாள் (06.09.2005) செவ்வாய்க்கிழமை நடைபெற திருவருள் கூடியுள்ளது.

காலை 8 மணிக்கு (108) சங்காபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப்பூசையும் திருவூஞ்சலும் நடைபெற்று, எம்பெருமான் பூந்தண்டிகையில் எழுந்தருளி அருள்பாலிப்பார்.

விநாயகர் சதுர்த்தி

ஆவணி மாதம் 22 நாள் (07.09.2005) புதன்கிழமை நிகழவிருக்க திருவருள் கூடியுள்ளது.

காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகத்துடன் பூசைகள் ஆரம்பமாகும். தொடர்ந்து ந.ப. 12 மணிக்கு மகேஸ்வரபூசை (அன்னதான நிகழ்வு) இடம்பெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சக்தி கணபதி பூசையும் நடைபெற்று, எம்பெருமான் எழுந்தருளி அருள்பாலிப்பார்.

சக்தி கணபதி பூசை செய்யும் அடியார்கள் காரியாலயத்தில் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவுசெய்யுமாறு வேண்டுகிறோம்.

அத்தியடி,
யாழ்ப்பாணம். (39580)(29-11)

பிள்ளையார் பணியில்
கோயில் நிர்வாகம்.



# SALES PROMOTIONS OFFICERS walk in interview

The ideal candidates should have passed GCE(A/L) examination and be able to converse at least two languages. A minimum of 2 years experience in a reputed manufacturing/ marketing organization is also required.

The job assigned to this post is challenging and involves working in the Northern Province in close liaison with Area Distributors and Dealers.

He should ensure a satisfactory level of distribution of Kelani products through the dealer net work. The appointee will be expected to achieve set territory target and provide market information useful for planning purposes.

The Company offers an attractive salary package and pleasant and friendly working environment, in addition to the salary, the selected candidate will be provided with a Company van to carryout duties.

Interested candidates who possess the specified qualifications and work experience, please call over to

NEW LANKA TRADERS (PVT) LTD.
222 & 226, Stanley Road, Jaffna.
T. Phone 021-2222062 & 2222838
On 8th September at 10.00 a.m. (39608)(29-11-45)

KELANI CABLES

Sales Manager Distribution
Kelani Cables Limited
P.O. Box 14
Weweldwa Kelaniya


# திருஞானசம்பந்தர் ஆய்வுக்கட்டுரைத் தேர்வு

யாழ்ப்பாணம், செப்.5

தவமுதல்வர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருமுறைகளில் உள்ள விழுமிய சிந்தனைகளை அனைவரும் அறிவதற்கும் அவற்றின் பயனைப் பெறுவதற்குமென தெஹிவளையில் அமைந்துள்ள ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் ஆய்வுக்கட்டுரைத் தேர்வு ஒன்றை நடத்தவுள்ளது.

'திருஞானசம்பந்தரும் தமிழும்', 'திருஞான சம்பந்தரும் சைவமும்', 'திருஞான சம்பந்தர் தரிசித்த திருத்தலங்களில் அவரது உள்ளம் கவர்ந்த இயற்கைக் காட்சிகள்', 'திருஞான சம்பந்தர் தெரிவிக்கும்சிவனது இயல்புகளும் அருட்செயல்களும்' போன்ற தலைப்புகளில் இந்த ஆய்வுக் கட்டுரைத் தேர்வு நடத்தப்படவுள்ளது.

இந்தத் தேர்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது கட்டுரைகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'தமிழவேள், 153, காங்கேசன் துறை வீதி, கொக்குவில் யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கவேண்டும்.

ஒவ்வொரு பிரிவிலும் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகளுக்கு ஆயிரம் ரூபாவீதம் பரிசில் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-203)


# பிற்போடப்பட்டுள்ளது

செல்வன் தியாகலிங்கம் செல்வி தர்ஜினி ஆகிய இருவருக்கும் 08.09.2005வியாழக்கிழமை யாழ். ஸ்ரீ காமாட்சி அம்மன் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருந்த திருமண வைபவம் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அழைப்பிதழ் கிடைத்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

ந. திருநாவுக்கரசு,
தங்கோடை, காரைநகர். (39617)(29-11)

சி.தர்மராஜா
தங்கோடை, காரைநகர்.


# UNIVERSITY OF JAFFNA
# TENDER FOR UNIFORM MATERIALS

Sealed Tenders are invited from reputed Suppliers for the following items.

| Serial No. | Item | Qty. |
|---|---|---|
| 1. | White Poplin / white Polyester Shirting 36"<br>2.28m - 06 Nos = 13.68<br>0.43m - 03 Nos = 1.29<br>0.91m - 09 Nos = 8.19<br>2.25m - 481 No. = 1,082.25 | 1105.41m |
| 2. | Black Drill/ Black Polyester Suiting 58"/ 60 "<br>1.2m - 495 Nos = 594.00<br>1.8m - 4 Nos = 7.20 | 601.20m |
| 3. | Khaki Drill/ Khaki Polyester Suiting 58"/60"<br>3m - 12 Nos. | 36.00m |
| 4. | Light Grey Poplin / Light Grey Polyester Shirting 36"<br>2.73m - 165 Nos. | 450.45m |
| 5. | Light Blue Poplin / Light Blue Polyester Shirting 36"<br>2.25 m - 198 Nos. | 445.50m |
| 6. | Grey Drill / Grey Polyester suiting 58" /60"<br>1.2m - 165 Nos | 198.00m |
| 7. | Dark Blue Drill / Dark Blue Polyester suiting 58" /60"<br>1.2m - 180 Nos. = 216.00m<br>1.82 m - 8Nos. = 14.56 m<br>6.17m - 3 Nos = 18.51m | 249.07m |
| 8. | White Drill / White Polyester Suiting 58" /60 "<br>2.29 m - 104 Nos. | 238.16m |
| 9. | White Cotton Saree / Polyester Saree 5.4 m each | 3Nos |
| 10. | Blue Cotton Saree / Polyester Saree 5.4m each | 9Nos |
| 11. | Socks - Black / Brown (Cotton / Nylon) | 120 Paris |
| 12. | Shoe (Safety Shoe with rubber Sole) | 48 Paris |
| 13. | Shoe (Strong Genuine Leather, Centre Lacing Shoe) | 55 Paris |

All Tenderers are requested to pay a non refundable Tender fee of Rs. 500.00 and refundable deposit of Rs. 5,000.00 by Money Order drawn infavour of the Bursar, University of Jaffna, payable at the Jaffna Post Office or in Cash at the Shroff Counter of the University of Jaffna. The Money Order / Cash Receipt to be attached to the Tenders. The University may at its discretion either to increase or to decrease the Quantity of items to be purchased. If any special discount allowed to the University should also be indicated. The successful supplier should be prepared to deliver these items at the University of Jaffna and to extend one month Credit facility. After confirmation of the order supply should be completed within three weeks time. Tenders should be sent under registered cover, along with the sample of each variety in 6" x 6" Size to the Bursar, University of Jaffna, Thirunelvely Jaffna. Top left hand corner of the envelope to be mark ed " Tender for Uniform Material" with No.: UJ/F/SK/T/06/05. Tenders should be sent on or before 12.09.2005 at 2.00 pm. Tenders will be opened on same day at 2.30 pm. (Tp. No. 021 2222644)

Registrar,
University of Jaffna.

(ß 44900)


# கூல் ஏயர்ஸ்

தொலைத்தொடர்பு நிலையங்கள்
வர்த்தக நிலையங்கள்
கணனி நிறுவனங்கள்
காட்சி அறைகள்
விருந்தினர் விடுதி அறைகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43,500/= |
| 12000BTU | 53,500/= |
| 18000BTU | 65,500/= |
| 24000BTU | 85,500/= |

காரியாலங்கள் மற்றும் உங்கள் வீடுகள் குளிர்மையில் குதூகலம் பெற வேண்டுமா A.C பொருத்தித் தர காத்திருக்கின்றார்கள்

கூல் ஏயார்ஸ்

மேற்கூறிய இடங்களுக்கு குறைந்த கட்டணத்தில் எயா கெண்டிசன் பொருத்திட

பொருத்துதல் இலவசம்

5 வருட உத்தரவாதம்

விற்பனைக்கு பிந்திய சேவை

மூன்று மாதத்திற்கொருமுறை தொழில்நுட்ப வல்லுநர்களால் குளிரூட்டிகள் மேற்பார்வை செய்யப்படும்

குறைந்த மின்சாரத்தில் இயங்கும் தனித்திறன் நாடுங்கள் கூல் எயார்ஸ்

உங்கள் நிறுவனம் அன்றி வீடு கடற்கரைப் பிரதேசத்தில் கடல் அண்டிய பகுதியில் அமைந்திருந்தால் அதற்கு ஏற்ப துருப்பிடிக்காத கவசம் கொண்ட குளிரூட்டிகள் A.C. பொருத்தித் தரப்படும்.

தொடர்புகளுக்கு:




(39544)(52)

கூல் ஏயார்ஸ்

151 1/1, மின்சார நிலைய வீதி,
பஸ் நிலைய முன்பாக, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0777 73 8888, 0713 080808, 071 773 8888


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் 3 மாதங்கள் போர்நிறுத்தம் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அறிவிப்பு

காத்மண்டு,செப்.5

நேபாளத்தில் மூன்று மாதங்களுக்கு போர் நிறுத்தத்தை மேற்கொள்ளப்போவதாக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

நேபாளத்தில் பிரதமர் தலைமையில் இருந்த அரசைக் கலைத்துவிட்டு அதிகாரத்தை மன்னர் கைப்பற்றினார். இதை எதிர்த்து மாவோ தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் நேபாளம் முழுவதும் பதட்டமான சூழ்நிலை நிலவிவருகிறது.

இந்த நிலையில், நேபாள மாவோ கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பிரசநதா என்ற புஷ்ப கமல் தஹால் நேற்றுமுன்தினம் நிருபர்களைச் சந்தித்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதில் 'நேபாளத்தில் நிலவிவரும் அரசியல் குழப்பத்தைத் தீர்க்க வழி ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், இன்னும் மூன்று மாதங்களுக்கு போர்நிறுத்தம் மேற்கொள்ளப்படும். இந்த முடிவு உடனடியாக அமுலுக்கு வருகிறது. தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த முடிவு எடுக்கப்பட்டது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் பிரசந்தா கூறுகையில், ''இன்று முதல் எங்கள் தரப்பில் இருந்து எந்த வன்முறைச் சம்பவங்களும் நடக்காது. எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவேண்டாம் எனத் தொண்டர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், எதிர்த் தரப்பில் இருந்து தாக்குதல் நடந்தால் பதிலடி கொடுக்க எங்கள் தொண்டர்கள் எப்போதும் தயார் நிலையில் இருப்பர்'' - என்றார்.

# ஷியா பிரிவினரைத் தாக்கிய வழக்கு: சதாமிடம் ஒக்ரோபரில் விசாரணை

ஈராக்கில் கடந்த 1982 ஆம் ஆண்டு ஷியா பிரிவு முஸ்லிம்களைக் கொலை செய்த வழக்கில் முன்னாள் அதிபர் சதாம் குசேன் மற்றும் அவரது ஆதரவாளர்களிடம் ஒக்ரோபர் 19ஆம் திகதி விசாரணை ஆரம்பமாகவுள்ளது.

ஈராக்கில் சர்வாதிகார ஆட்சி புரிந்து வந்த சதாம் குசேனை அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டு படை கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அவர் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஈராக்கில் துஜெயில் என்ற கிராமத்தில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் தங்கியுள்ளனர். சதாம் சன்னி பிரிவைச் சேர்ந்தவர். இந்தப் பிரிவினர் ஈராக்கில் சிறுபான்மையினராகவே உள்ளனர்.

கடந்த 1982ஆம் ஆண்டு துஜெயிலில் தங்கியிருந்த ஷியா பிரிவு முஸ்லிம்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், ஏராளமானவர்கள் கொல்லப்பட்டனர்.

சதாம் குசேனின் தூண்டுதலின் பேரிலேயே இந்தத் தாக்குதல் நடந்ததாக இப்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை நீதிமன்றில் நடக்கும் போது சன்னி பிரிவு முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சதாமுக்கு ஆதரவாக சட்ட நிபுணர்கள் குழு

சதாம் குசேனுக்கு ஆதரவாக வழக்காடுவதற்கு சர்வதேச அளவிலான சட்டநிபுணர்கள் அடங்கிய குழுவை அவரது குடும்பத்தினர் உருவாக்கியுள்ளனர்.

ஈராக் அதிபர் சதாம் குசேன் சிறையில் அடைக்கப்பட்டு, அமெரிக்க ராணுவ சிறப்பு நீதிமன்றத்தில் அவர் மீதான வழக்கு நடைபெற்று வருகிறது. இந்நிலையில், சதாம் மீதான குற்றச்சாட்டுகள் குறித்துப் பதிலளிப்பதற்கும், அவரைக் குற்ற வழக்குகளிலிருந்து விடுவிக்கவும், சர்வதேச அளவிலான சட்டத்தரணிகள் அடங்கிய குழு உருவாக்கப்பட்டுள்ளது. இது குறித்து சதாமின் மூத்த மகளான ரக்த தின் அப்தெல் ஹக் அலானி என்பவர் கூறுகையில், ''அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த புகழ்பெற்ற சட்ட நிபுணர்களைக் கொண்ட சர்வதேச குழு உருவாக்கப்பட்டுள்ளது. சதாம் மீதான விசாரணையில் அவர் சார்பில் வலுவாக வாதாட வேண்டுமென்பதற்காக, பல்வேறு தகுதிகளின் அடிப்படையில் இந்தச் சட்டநிபுணர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்,'' என்று கூறினார்.

## சூறாவளியால் பாதிப்புற்றோருக்கு உதவ

# வைத்திய நிபுணர்கள் 1,100பேரை அமெரிக்காவுக்கு அனுப்புகிறது கியூபா

ஹவாணா,செப்.5

அமெரிக்காவில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியான்ஸ் பகுதி மக்களுக்கு உதவ 1100 வைத்திய நிபுணர்கள் மற்றும் 26.4 தொன் மருந்துப் பொருள்களை கியூபா அனுப்பிவைக்கிறது.

இதுகுறித்து கியூபா அதிபர் பிடல் காஸ்ரோ வானொலி மற்றும் தொலைக்காட்சியில் சனிக்கிழமை ஆற்றிய உரையில் தெரிவித்ததாவது:-

கியூபா உடனடியாக உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. அங்கு தற்போது தேவைப்படும் மருத்துவ உதவிகளைச் செய்கிறோம்.

எந்த ஒரு நிபந்தனையும் இன்றி இந்த உதவிகளைச் செய்கிறோம்- என்றார்.

கியூபா மீது 40 ஆண்டுகளாகப் பொருளாதாரத் தடை விதித்துள்ளது அமெரிக்கா. பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்பதற்காக இந்த உதவிகளைச் செய்யவில்லை என்றும் அவர் கூறினார்.

ஜூலை மாதம் கியூபாவில் ஏற்பட்ட சூறாவளியின்போது அமெரிக்கா அளித்த உதவிகளை கியூபா ஏற்க மறுத்தது.

# பொடா ரத்துச் செய்யப்பட்டமை வைகோவுக்குக் கிடைத்த வெற்றி

## நூல்வெளியீட்டு விழாவில் பிரதமர் மன்மோகன் புகழாரம்

'பொடா சட்டத்தை நாங்கள் ரத்துச் செய்தது வைகோவுக்குக் கிடைத்த வெற்றி'' என்று சென்னையில் வைகோ எழுதிய நூல் வெளியீட்டு விழாவில் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ, பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார். 16 மாதங்கள் சிறையில் இருந்தார் வைகோ. சிறையில் இருந்த போது அவர் எழுதியதை 'சிறையில் விரிந்த மடல்கள்' என்று நூலாக வெளியிட்டுள்ளார். சென்னையில் நேற்றுமுன்தினம் அந்நூலை பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டுப் பேசியதாவது:

சிறைக்குள் இருந்து வைகோ எழுதிய புத்தகத்தை வெளியிடுகிற சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். சுதந்திரப் போராட்ட வீரர்களும், விடுதலை இயக்கத் தலைவர்களும் வரலாற்றுச் சிறப்புக்குரிய நூல்களை சிறையில் எழுதினர்.

அதேபோல், இந்த நூலை எழுதுவதற்கு சிறைவாசத்தை வைகோ பயன்படுத்திக் கொண்டார். வைகோ மீது எனக்கு மிகுந்த அன்பு உண்டு. ஏனெனில், அவர் மக்கள் கூட்டத்தின் தலைவர். பலமுறை என்னுடன் தொலை பேசியில் வைகோ பேசுவார். நாட்டுப் பிரச்சினை பற்றியும், சாமானிய மக்கள் குறித்தும் தான் என்னிடம் அவர் பேசுவார். வைகோ போன்ற கற்றறிந்த, சமூக அக்கறையுள்ள, அர்ப்பணிப்பு உடைய தலைவர்களைப் பெற்றுள்ளதால் தமிழகத்துக்கு அதிர்ஷ்டம் என்று நான் நம்புகிறேன். - என்றார்.

இந்த நூல் வெளியீட்டு விழாவில் கலைஞர் கருணாநிதியும் கலந்துகொண்டார்.



ம.தி.மு.க. செயலாளர் வைகோ எழுதிய 'சிறையில் விரிந்த மடல்கள்' நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், கலைஞர் கருணாநிதி ஆகியோர் இணைந்து நூலை வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம்.

## பாகிஸ்தான் உயர் நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதியாக இந்து ஒருவர் பதவியேற்பு

இஸ்லாமாபாத், செப்.5

பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் தற்காலிக தலைமை நீதிபதியாக முதல் முறையாக ஓர் இந்து பதவியேற்றுள்ளார்.

பாகிஸ்தானில் இந்துக்கள் யாரும் இதுவரை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாகப் பொறுப்பு வகித்ததில்லை. தற்போது பாகிஸ்தான் உயர் நீதிமன்ற மூத்த நீதிபதி ராணா பகவன்தாஸ் அந்தப் பெருமையைப் பெற்றுள்ளார். அவருக்கு 63 வயதாகும். இவர் கராய்ச்சியில் பிறந்தவர். பாகிஸ்தானில் பணியில் உள்ள சில இந்து நீதிபதிகளில் இவரும் ஒருவர். 1967 இல் பணியில் சேர்ந்த இவர் செசன்ஸ் நீதிபதி, சிந்து மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி பதவிகளை வகித்தவர் இஸ்லாம் பற்றி முதுகலை பட்டம் பெற்றவர்.

இப்போது தலைமை நீதிபதியாக இருக்கும் இப்திகர் முகம்மது சவுத்ரி 10 நாள் பயணமாகச் சீனாவுக்குச் சென்றுள்ளார். அவர் திரும்பிவரும் வரை பகவன்தாஸ் அந்தப் பதவி வகிப்பார்.

அரசமைப்புச் சட்டத்தில் நிபுணர் எனக் கூறப்படும் பகவன்தாஸ் கடந்த வெள்ளிக்கிழமை கராய்ச்சியில் பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு நீதிபதி சையது சயீது அஷத் பதவி பிரமாணம் செய்து வைத்தார். சிந்து மாகாண மேல்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (8)

உலக அரங்கில்

# இஸ்ரேல் - பாக். ராஜீய உறவு: கவலை தெரிவிக்கிறது பலஸ்தீனம்

காஸாசிற்றி,செப்.5

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நீடித்து வரும் நிலையில், இஸ்ரேலுடன் பாகிஸ்தான் ராஜீய உறவு தொடர்பாகப் பேசுவது கவலை அளிக்கிறது என்று பலஸ்தீனம் தெரிவித்துள்ளது.

ஜெருசலேம் கிழக்குப் பகுதியிலும் மேற்குக் கரைப் பகுதியிலும் இஸ்ரேல் தொடர்ந்து ஆக்கிரமித்து வருகிறது. இந்நிலையில் இப்பேச்சு கவலை தருகிறது என்கிறது பலஸ்தீனம்.

''அமைதி முயற்சிகளைச் செயலுக்குக் கொண்டுவருவதற்கு முன்பே இஸ்ரேலுடன் ராஜீய உறவு ஏற்படுத்திக்கொள்வது நல்லதல்ல'' என்று பலஸ்தீன துணைப் பிரதமர் நபில் ஷாத் நிருபர்களிடம் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிரதமர் மஹ்மூத் அப்பாஸும் இதே கருத்தையே கொண்டிருப்பார் என்று அவர் குறிப்பிட்டார்.

''இஸ்ரேலுடன் ராஜீய உறவுகளை வைத்துக் கொள்வதற்கு இது தருணமல்ல. 1967ஆம் ஆண்டில் ஆக்கிரமித்த எல்லா இடங்களிருந்தும் இஸ்ரேல் விலகவேண்டும், அகதிகள் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்'' - என்றார் அவர். (8)

# சேது சமுத்திரத்திட்டத்தை எதிர்ப்போர் தமிழ் சமுதாயத்தின் சாபத்துக்கு ஆளாவர்

## தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவிப்பு

சென்னை,செப்.5

''சேது சமுத்திரத் திட்டத்திற்கு உலை வைக்க நினைப்போர், வருங்கால தமிழ்ச் சமுதாயத்தின் சாபத்துக்கு ஆளாவார்கள்'' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

மீன்கள் கிடைக்கவில்லை என்றும், அதனால் மீனவர்கள் வாழ்வே போய்விட்டது என்றும், அதற்கு சேது சமுத்திர திட்டத்திற்காகக் கால்வாய் தோண்டும் பணிதான் காரணம் என்றும் கதையளந்து அறிக்கை விட்டிருக்கிறார் ஜெயலலிதா.

தமிழ்நாட்டுக்குப் பயன்படக்கூடிய இந்தத் திட்டத்திற்கு உலை வைக்க நினைப்போர், வருங்கால தமிழ்ச் சமுதாயத்தின் சாபத்துக்குத் தான் ஆளாவார்கள். தமிழ்நாட்டைப் பற்றியும், எதிர்காலப் பொருளாதார வளர்ச்சி பற்றியும் கவலைப்படாத ஜெயலலிதா, எரிச்சலைக்கொட்டி அறிக்கை விட்டிருக்கிறார். எல்லா வகையான ஆய்வுகளும் முறையாக நடத்தப்பட்ட பிறகு 150 வருடகாலமாகத் தமிழ்மக்களின் கனவாக இருந்த திட்டத்தை அறிவிப்புச் செய்து நடைமுறைப்படுத்த மத்திய அரசு முனைந்துள்ளதை நாட்டு மக்கள் அறிவார்கள்.

இவ்வாறு கருணாநிதி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியர்*
*திரு.சு.கிருபானந்தன் அவர்களின் அன்புச் சகோதரி*

**செல்வி சுப்பிரமணியம் செல்வராணி**

*அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யா/நாவற்குழி மகாவித்தியாலயம்,
கைதடி.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள்,**
**கல்விசார ஊழியர்கள்.**

(39601)(26-14)

பாஷாண உத்வாசன

# சபிண்டீகரண அழைப்பு

**அன்புடையீர்!**



25.08.2005 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் **ஸ்ரீமதி நாகபூசணியம்மா திருச்சிற்றம்பலம் ஐயா** அவர்களின் பாஷாண உத்வாசனம் இன்று (05.09.2005) திங்கட்கிழமை காலை 6 மணிக்கும், நாளை (06.09. 2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் சபிண்டீகரணமும் நடைபெறும். தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேவில் பிள்ளையார் கோயில்,
வல்வெட்டி.

தி.கமலநாதன் ஐயா (சுவிஸ்),
தி.விக்னேஸ்வரக்குருக்கள் (S.D.O),
மற்றும் சகோதரர்கள்.

(39610)(26-14)

# சேவைநலன் பாராட்டு



திரு .செல்லத்துரை விசுவலிங்கம்

**18.08.1945**

| | |
|---|---|
| முதல் நியமனம் | 1976 |
| ஓய்வு | 2005 |

சேவை விவரம்

| | |
|---|---|
| யா/பூநகரி ம.வி. | 1976 - 1978 |
| யா/பளை ம.வி. | 1978 - 1984 |
| யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி | 1984 - 1995 |
| ஆசிரிய ஆலோசகர் (தமிழ்) | 1995 - 2005 |

*எமது கழகத்தின் தலைவரான செல்லத்துரை விசுவலிங்கம் தமது 19 வருட ஆசிரிய சேவையையும், பத்து வருட ஆசிரிய ஆலோசகர் சேவையையும் நிறைவு செய்து ஓய்வுபெறுவதையிட்டு எமது கழகத்தின் சார்பில் அவரை வாழ்த்துகின்றோம்.*

(39614)(26-14)

**ஆசிரிய ஆலோசகர் கழகம்,**
**யாழ்ப்பாணக் கல்வி வலயம்.**

உ

சங்குவேலி தெற்கு-மானிப்பாய்
திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்
திருக்கோயில் புனராவர்த்தன அஷ்ட பந்தன
பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| **காலம்: 09.09.2005** | வெள்ளிக்கிழமை காலை 7.34 மணி முதல் 8.34 மணி வரை |
| **05.09.2005- திங்கள்:** | மாலை 6.30 மணிமுதல் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம் |
| **06.09.2005- செவ்வாய்:** | மாலை 6.30 மணிக்கு மேல் வாஸ்து சாந்தி, நவக்கிரக ஹோமம், திசா ஹோமம் முதலியன. |
| **07.09.2005- புதன்:** | நூதன மூர்த்திகள் கிராம பிரதக்ஷணம் |
| **08.09.2005- வியாழன் :** | காலை 7.00 மணிமுதல் பி.ப.2.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் |
| **09.09.2005 - வெள்ளி :** | காலை மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நடைபெறும். |

அம்பாள் அடியார்கள் வருகை தந்து
அம்பிகையைத் தொழுது திருவருள் பெறுக.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

-ஆலய நிர்வாக சபையினர்.

(சி/45008)(26-14)

# கடையிற் சுவாமிகள்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அன்புடன் வேண்டினார். இறை சித்தம் அதுவானால்யாமும் அங்கே எழுந்தருளுவோம் என்று விடை கொடுத்து அருளினார்.

சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளியவாறு முதன்முறையாக வைரமுத்துச் செட்டியாரின் இல்லத்திற்கு 1862ஆம் ஆண்டளவில் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி எழுந்தருளினார். விசாலமான தோள்களும் நீண்ட கைகளும் நுனியில் வளைந்த மூக்கும், கம்பீரமான தோற்றமும் உடையவர். முகத்திலே ஒரு அதீத புன்னகை தவழும். அவருடைய கக்கத்துக்குள் ஒரு குடை எப்பொழுதும் இருக்கும். யாழ்ப்பாணச் சித்தர்களுள் முதலிடம் பெறுபவர் கடையிற்சுவாமிகளாவார். அவருடை ஊர், பெயர், பெற்றோர், குலம் என்பன இதுவரை திட்டவட்டமாக அறியப்படவில்லை. எனினும், அடியார்க்கு வேண்டியன வழங்கி அவர்களுடைய முகத்திலே மகிழ்ச்சியைக் காண்பவரே கடையிற்சுவாமிகள். இவர் பெரியகடைச் சதுக்கத்தில் வாழ்ந்து வந்தமையால் அவருக்கு கடையிற் சுவாமிகள் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று.

இவர்மேல் தீராதபக்தி கொண்ட வைரமுத்துச் செட்டியாரின் மறைவின்பின் அவருடைய வழித்தோன்றல்கள் 1898ஆம் ஆண்டளவில் வண்ணார்பண்ணை கிழக்கு நாவலர் வீதியில் 'கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திரம்' என்ற பெயரில் ஓர் ஆலயத்தையும் மடத்தையும் நிறுவினர். ஒவ்வொரு வாரமும் குரு வார (வியாழன்) நாளை முதன்மையாகக் கொண்டு அடியார்களுக்கும் பசித்தோருக்கும் வறியவர்களுக்கும் அன்னமிடப்பட்டது. இதனால் குருவார அன்னசத்திரம் என்றபெயர் வழங்கப்படலாயிற்று.

சுவாமிகள் தமது சக்தியினை நோயற்றவர்களுக்கும், வறியவர்களுக்கும் துன்பப்பட்டோருக்கும் அவர்களின் துன்பங்களைத் துடைத்து உயரிய நெறியினை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். இவருடைய அரிய பெரிய செயல்களைக் கண்ணுற்றவர்கள் தமது உளத் தூண்டுதலால் அவருக்கு அடியவர்களாகச் சேர்ந்து அவருடன் கூடி அறநெறியினை மேற்கொண்டனர். அவர்களுள் மண்டைதீவைச் சேர்ந்த சின்ன சுவாமி என்று அழைக்கப்படும் ஓர் அடியார் அவர் இறைபணியினை சிர மேற்கொண்டு 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற வாக்கிற்கமைய இறைவனைப் பூசித்து அடியவர்க்கு அன்பு செலுத்தும் ஆற்றலைக் கொண்டிருந்தார். இதனை கண்ணுற்ற கடையிற் சுவாமிகள் சின்னச் சுவாமிகளை இக்குருவார அன்னசத்திரத்தில் தங்கி இறைபணியினை மேற் கொள்ளும்படியும் உரிய காலம் எய்தும்போது இங்கேயே சமாதி நிலை ஏற்படும் என்றும் அருளினார்.

சின்னச்சுவாமிகள் தனது குருவானவர் இட்ட கட்டளைக்கு இணங்க பக்தர்களுக்கு இறைவனுடைய நாமத்தைக் கூறி அவர்களுக்கு வரும் இன்னல்களைத் துடைத்தெறிந்தார். அதுபோலவே மகேஸ்வர பூசைகளையும் சிறப்புற நடத்தினார். காலப்போக்கில் அவருடைய பக்தியின் முதுமை காரணமாக இறைவனின் ஆஞ்ஞை கிடைத்திருப்பதாகக் கூறி பக்தர்கள் புடை சூழ நிஷ்டை சமாதி நிலையினை எய்தினார். 1927ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5ஆம் திகதி அவருடை சமாதித் தினமாகும்.

சின்னச்சுவாமிகளின் சமாதியிலே ஆலயம் எழுப்பப்பட்டு, அந்த ஆலயத்தில் மூலவராக விளங்குபவர் நாகலிங்க மூர்த்தியா கும். இவ்வாலயத்தில் பரிவார தெய்வங்களாக விநாயகர், முருகன், அம்பாள் போன்ற விக்கிரகங்கள் விளங்குகின்றன. ஆலயத்தின் நேர் எதிரே அரச மரத்தடியில் தலவிருட்ச சுவாமியாக வைரவப் பெருமானும் எழுந்தருளியுள்ளார்.

இவ்வாலயத்தின் பூசைகள், அன்னதானங்கள் யாவும் சிறப்புற நடைபெறுவதற்காக நிலபுலங்கள் தரும சாசனமாக எழுதப்பட்டுள்ளது.

நல்லூர் உற்சவகாலத்தின்போது வெளியூர்களிலிருந்து வந்து தங்கும் அடியார்களுக்கும் நல்லூர் பக்தர்களுக்கும் தாகசாந்தி செய்வதற்காகத் தண்ணீர்ப் பந்தல் அமைத்து தாக சாந்தி செய்வதும் அன்னதானம் செய்வதும் இவ்வாலயத்தின் பணியாக இன்றும் தொடர்கின்றது. வைரமுத்துச் செட்டியாரின் பரம்பரையினர் இன்றும் கோயிலின் அயலில் இருந்து ஆலயத்திற்குத் தொண்டுபுரிந்து வருகின்றனர்.

எனவே, ஆலயங்களிலே மூல மூர்த்தியினை பிரதிஷ்டை செய்து வழிபடுவதிலும் பார்க்க ஒரு சித்தரையே ஆலயமாகக் கொண்ட கோயில்கள் வெகு சொற்பமாகும். இவையாவும் சைவ ஆலயத்தின் ஆணி வேராகும். இந்த வகையில், கடையிற் சுவாமிகள் குருவார அன்னசத்திரத்தில் அமைந்துள்ள சின்னச் சுவாமிகளின் சமாதிக் கோயில் சிறப்பு பெறுகிறது. எனவே, இவ்வாலயம் காலத்தின் கோலத்தினால் அழியாவண்ணம் எதிர்கால சந்ததியினருக்கு அதன் தனித்துவத்தைப் பேணவைத்துக் காப்பாற்றிக் கொடுப்பதே இந்துக்கள் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

கடையிற் சுவாமிகளின் சமாதிக்கோயில் இவ்வாலயத்திலிருந்து சற்றுத்தூரத்திலுள்ள நீராவியடியில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

**சுதேச மருத்துவர் சங்கம்**
**யாழ். மாவட்டம்**
**அறிவித்தல்**

சித்த ஆயுள்வேத பரம்பரை மருத்துவர்கள் (பதிவுள்ள/ பதிவற்ற) 12/09/2005 இற்குமுன் எமது சங்கத்திலிணைந்து அடையாள அட்டை, மருத்துவ உரிம விண்ணப்பம், பதிவற்றவர்களுக்கான பதிவு ஏற்பாடு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும்.

வைத்தியர் க.சோதிதாசன்
தலைவர்
T.P: 0776 284687

வைத்தியர் ஜெ.ஜெயலன்
செயலாளர்
0779 122888

த/முகவரி:
முருகானந்தா வைத்தியசாலை,
மாம்பழம் சந்தி, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(39614)(26-14)

**படிவங்கள்**

* இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (மட்டுப் படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சை,
* மற்றும் வேலையற்ற பட்டதாரிகளுக்கான கட்டத் திணைக்களம், தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்கள வெற்றிடங்களுக்கான பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.

Bharathi Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.




POWER GYMஇன்
அதிரடி சலுகை

யாழ் நகரில் முதன் முறையாக நவீன உபகரணங்களுடன் ஆரம்பிக்கப் பட்டPOWER GYM BODY CARE & FITNESS CENTRE மூன்றாது ஆண்டில் காலடி எடுத்துவைப்பதில் பெருமையடை கின்றது.

இவ் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு POWER GYM இன் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

மேலதிக அதிநவீன உபகரணங்கள் இணைக்கப்பட்டு இடப்பரப்பு அதிகரிக்கப்பட்டு அமைதியான சூழலில் பயிற்சிகள் நடைபெறுகின்றன. மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைப்பதை முன்னிட்டு POWER GYM இன் அதிரடிக் கட்டணச் சலுகையாக அனுமதிக் கட்டணத்தில் 50/ சலுகை இச்சலுகை மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினருக்கே.

தினமும் காலை 5.30 இரவு 10.30 வரை நீண்ட தொடர்சேவை
பெண்களுக்கு பிரத்தியேக நேரம் பிரத்தியேக பயிற்றுவிப்பாளர்
வீடியோ மூலம் செய்முறை விளக்கங்கள்



*சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நவீன உடற்பயிற்சி உபகரணங்களூடாக உங்கள் உடல் அழகை மெருகேற்றத் தயாராகுங்கள்.*

குறிப்பு:
எமக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

POWER GYM
Body Care & Fitness Centre
230/1 நாவலர் வீதி, (ஆனைப்பந்தி சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம். தொ. பே.: 021 222 3298, 0777 252098

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,



நிகழும் பார்த்திப வருடம் ஆவணி மாதம் 11 ஆம் நாள் (27-08-2005) சனிக்கிழமை இரவு அபரபக்க நவமித்திதியில் சிவபதமெய்திய அராலி மத்தி உலோலை சீட்டிப்பிள்ளையார் கோயில் பிரதமகுரு முத்துக்குமாரசாமி குருக்கள்

## பிரபாகரசர்மா அவர்களின்

ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| தசாகம் :- | 05-09-2005 திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணி |
| ஏகோதிஸ்டம், மாசிகம் :- | 06-09-2005 செவ்வாய்க்கிழமை |
| சபிண்டீகரணம் :- | 07-09-2005 புதன்கிழமை |
| கிருஹயக்ஞம் :- | 08-09-2005 வியாழக்கிழமை |

மேற்படி கிரியைகளிலும் 08-09-2005 வியாழக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் தங்களையும் தங்கள் குடும்பத்தினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சித்திவிநாயகர் கோயிலடி,
16, அருளம்பலம் வீதி,
அரியாலை.

(39576) (25-34-12)

**மனைவியும், பிள்ளைகளும்.**

ஓம் விராட் விஸ்பப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திய வருஷம் ஆவணித் திங்கள் 20ஆம் நாள் (05.09.2005) திங்கட்கிழமை முற்பகல் 09.10 மணி முதல் 10.34 மணி வரையுள்ளஉத்தர நட்சத்திரமும், துலா லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்

திரு.திருமதி திருச்செல்வம் தம்பதிகளின் புத்திரன் திருவளர் செல்வன்

**பிரகாஸ்** அவர்களுக்கும்



திரு. திருமதி. நாகலிங்கம் தம்பதிகளின் புத்திரி திருவளர் செல்வி

**தனுஷியா** அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை கேசாவில் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திரப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, நிகழ்வினைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்*

திரு. திருமதி நாகலிங்கம் (செல்வம்)
பஞ்சவர்ணம் குடும்பத்தினர்
இல: 23, நாவலடிவீதி,
வண்ணார்பண்ணை, வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி வீ. திருச்செல்வம்
உருத்திரமணிதேவி குடும்பத்தினர்
இல: 32, கேசாவில் பிள்ளையார்
கோவில்வீதி, வண்ணார்பண்ணை, வடமேற்கு,
யாழ்ப்பாணம்.

*இரு வீட்டார் அழைப்பு*

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 710 |
| திகதி | 02-9-2005 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 5659623-5675610

வெற்றி இலக்கங்கள்

**07 39 44 50**

லக்கினம் மீனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 39,68,300/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,50,922 | 10/- | 35,09,220/- |
| 2.இலக்கங்கள் | 32,134 | 20/- | 6,42,680/- |
| 1.இல லக்கினம் | 31,825 | 30/- | 9,54,750/- |
| 2.இல லக்கினம் | 3,000 | 100/- | 3,00,000/- |
| 3.இலக்கங்கள் | 853 | 500/- | 4,26,500/- |
| 3.இல லக்கினம் | 85 | 5,000/- | 4,25,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | 1 | 39,68,300/- | 39,68,300/- |
| | | மொத்தம் | 1,06,26,450/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,16,78,700/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 1,16,78,700/- தொடர் இல. 4722903 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5673137-2-12 |
| அம்பாறை | 5659757-1-58 |
| பதுளை | 5672228-4-47 |
| காலி | 5674126-2-72 |
| மட்டக்களப்பு | 5664841-4-[illegible] |

## விவரம் அனுப்பிவைப்பு

வலி.தென்மேற்கு,செப்.5

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் விழிப்புலன், செவிப்புலன் குறைந்த மாணவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு மாகாண சமூக சேவைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் வலய கல்விப் பணிமனையால் பரிசோதிக்கப்பட்ட பின்னர் இந்த விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டன எனக் கூறப்பட்டது. (எ-135)

# IIS CITY CAMPUS

## BSc IT / BBA

மாணவர்களே !

மேற்படி கற்கை நெறிகள் தொடர்பாக இன்றைய உதயனில் பிரசுரிக்க இருந்த விளம்பரம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிரசுரிக்கப்படவில்லை. நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த மேற்படி விளம்பரம் புதன்கிழமை 7ம் திகதி உதயன் பத்திரிகையில் எதிர்பாருங்கள்.

Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P.No.: 021 222 8060, 021 222 2201

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 03 . 1947



மறைவு 16 . 09 . 2004

### வேலுப்பிள்ளை நடேசு

*ஓராண்டு சென்றாலும் மறையாத*
*- திருமுகமே*
*எங்கள் குடும்பத்தின் குல விளக்கே*
*அன்பின் இருப்பிடமாய்*
*பாசத்தின் உறைவிடமாய்*
*குடும்பத்தின் ஒளி விளக்காய்*
*சமூகத்தின் அறிவொளியாய்*
*பல்லோர் போற்றும் பண்பாளனாய்*
*பாரினில் வாழ்ந்து காட்டிய அன்புத் தெய்வமே*
*தாங்கள் இறை அடி சேர்ந்து ஓராண்டு*
*- சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும் எம்மை*
*- விட்டகலாது!*
*என்றும் கலையாத நினைவுகளுடன்*
*எங்கள் கண்ணீர் பூக்களால்*
*அர்ச்சித்து உங்கள் ஆத்மாசாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (05.09.2005) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(39635) (25-34-12)

தங்கள் பிரிவால் வாடும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

தகவல்:
**பா.குணவதி**
கிளான்துன்னாலை தெற்கு, கரவெட்டி


**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.

சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்

**இங்கிலீஸ்காரன்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(சி-43363)

**மனோகரா** யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

**தாஸ்**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,

அடுத்த வெளியீடு: சிம்பு, கோபிகா நடித்த

**தொட்டி ஜெயா**

(சி-44110)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த

**அந்நியன்** (ரீல்ஸ்)

(டொல்பி ஒலியமைப்பு)

காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).

**ராஜா** யாழ்ப்பாணம்

சுரேஸ்கோபி நடித்த

[illegible]

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)

(சி-43380)


வட பிராந்திய போக்குவரத்துச் சபை - கோண்டாவில்

# அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய சங்காபிஷேகம் - 05.09.2005

*பரமனை மதித்திடாப் பங்கயாசனன்*
*ஒருதலை கிள்ளியே - யொழிந்த வானவர்*
*குருதியும் அகந்தையும் கொண்டு கண்டமும்*
*[illegible] போற்ற செயகுவாம்*

என்னும் தோத்திரத்தில்

நான் என்ற அகங்காரமும் இறுமாப்பும் கொண்ட பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து அவனது இரத்தத்தையும் உறுஞ்சி அவனது அகந்தையையும் ஒடுக்கிய வைரவர் வரலாற்றினை கச்சியப்ப சுவாமிகள் கூறியுள்ளார்.

01.01.1958 இல் இ.போ.சபை நிறுவப்பட்டது. ஆரம்பத்திலே ஆனைப்பந்தியிலும், ஒட்டுமடத்திலும் வேலை செய்தவர்கள் ஞான வைரவரை வைத்து வழிபட்டனர். பின்னர் சாலைகள் கோண்டாவிலில் இயங்க ஆரம்பித்தபோது 1969 இல் பொறியியற் காரியாலயத்திற்கு வடக்கேயுள்ள வேப்ப விருட்சத்தின் கீழ் வைரவர் ஆலயம் வைத்து வணங்கினர். பின்னர் சபையின் அனுமதியுடன் தற்போது இடத்தில் ஆலயம் நிறுவப்பட்டது. 09.09.1978 இல் முதலாவது மகா கும்பாபிசேகம் திரு.நா.தியாகராசா அவர்கள் சாலை முகாமையாளராக இருந்தபோது சிறப்பாக நிறைவேறியது. 1984 இல் மணிக்கூண்டுக் கோபுரமும் திரு.சு.மணிவாசகன் சாலை முகாமையாளராக இருந்த போது அமைக்கப்பட்டது. சிவஸ்ரீ நா.பாலசுப்பிரமணிய சர்மாவைத் தொடர்ந்து 1987ஆம் ஆண்டிலிருந்து சிவஸ்ரீ தி.சோமநாதசர்மா (கண்ணன் ஐயா) அவர்கள் பூசகராக இருந்து நித்திய பூசை செய்யப்பட்டு வருகின்றது.

03.09.1997 ஆம் ஆண்டு 2 ஆவது மகா கும்பாபிசேகம் திரு.வி.எஸ்.சொக்கலிங்கம் பொதுமுகாமையாளராக இருந்தபோது புனருத்தாரணம் செய்யப்பட்டு வெகுசிறப்புற நிறைவேறியது. சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது. இன்று (05.09 .2005) திங்கட்கிழமை சங்காபிசேகம் - திருப்பணி வேலைகள் தற்போதைய பொதுமுகாமையாளர் திரு.கே.கணேசபிள்ளை அவர்களின் தலைமையில் ஊழியர்களின் பங்களிப்பில் சிறப்புற நடைபெறுகின்றது. இன்றைய தினம் வழமை போல் மகேஸ்வர பூசையும் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. காவல்தெய்வமானஎமது ஞானவைரவர் ஆலயம் ஊழியர்களிடையே பேதங்களை மறந்து செயற்படும் ஆலயமாக வளர்ச்சி அடைந்துள்ளது. புதுப்பொலிவுடன் காட்சிதரும் வைரவப் பெருமானின் அருட்பிரவாகம், பொதுச்சேவை செய்யும் வ.பி.போ.சபை ஊழியர்களுக்குக் கிடைக்கவும் நாட்டில் அமைதி தொடரவும் பிரார்த்திப்போமாக.

(சி-45024) (25-34-12)

**அன்பன்.**

# மரண அறிவித்தல்கள்

## அமரர் செல்லத்துரை திருநாவுக்கரசு

(மருந்துக் கலவையாளர்)

ஊரெழு மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு நேற்று (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2005) திங்கட்கிழமை பிற்பகல் புதிய நேரம் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு மேற்கு பொக்கணை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39637) (25-34-12)

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*

தகவல்:
**சசி(அன்பு மகள்),**
**திருநாவுக்கரசு சிவமலர் (மனைவி),**
**சயானந்தன் (சயா - மகன்).**

## வேலுப்பிள்ளை மகாலிங்கம்



வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மகாலிங்கம் 02.09.2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தம்பிப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராசகுலசிங்கம் (M.P.C.S., நெடுங்கேணி), அமிர்தராணி, குமாரகுலசிங்கம், தர்மகுலசிங்கம் (NSB, சாவகச்சேரி), அமிர்தகுலசிங்கம் (Zonal Education Office,வலிகாமம்),ஜெயகுலசிங்கம் (V.C., நீர்வேலி), ஆனந்தராஜா (Public Library,வவுனியா), ஸ்ரீஸ்கந்தராஜா (NSB, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளையாட்டரங்கு வீதி,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

(39635) (25-34-12)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

## தர்மலிங்கம் லிங்கேஸ்வரன் (லிங்கம்)



கருகம்பனை,காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் லிங்கேஸ்வரன் (லிங்கம்) 16.08.2005 செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னார் தர்மலிங்கம்-திலகவதி தம்பதியரின் அருமைப் புதல்வனும் இராமேஸ்வரன், சிவகுமாரி, ஜெயகுமாரி, விஜயகுமாரி (யாழ். வர்த்தக கூ.ச.,கோப்பாய்), ஸ்ரீகுமாரி (கல்வியியற் கல்லூரி ஆசிரியை,குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.), ஸ்ரீதேவி (உரும்பிராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2005) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
*T.P.: 021 4591843*

(39634) (25-34-12)

தகவல்:
**தர்மலிங்கம் குடும்பத்தினர்.**

# செப். 30ஆம் திகதி யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:-

ஸ்ரீலங்கா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி நோர்வே அரசின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அத்துடன் ஆறு சுற்றுப் பேச்சுகளும் நடத்தப்பட்டன. ஆனால், பேச்சுகளின் முடிவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த சிங்கள அரசு தவறியது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவை புலிகள் முன்வைத்தபோது அதுகுறித்து தொடர்ந்து பேச சிங்கள அரசு முன் வரவில்லை. அதேவேளை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கட்டமைப்புக்கு ஸ்ரீலங்கா நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழ் பேசும் மக்களுக்குரிய நியாயமான எந்த ஒரு தீர்வையும் முன்வைக்கமாட்டார்கள் என்பது இப்போது அப்பட்டமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மை நிலையினை சர்வதேசச் சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தி எமக்கான நியாயத்தைக் கோருகின்றோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் இன்று தமிழர் அரசொன்று நடைமுறையில் உள்ளது. அதிலும் சுமார் 70 வீதமான நிலப்பரப்பு தமிழர் படைகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. எஞ்சியுள்ள எமது தாயக நிலத்தையும் கடலையும் ஸ்ரீலங்கா இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது.

இந்நிலையில் தமிழருடைய அரசின் இறைமையை அங்கீகரிக்க வேண்டுமென சர்வதேசச் சமூகத்திடம் நாம் கோரிக்கை விடுக்கின்றோம். அவ்வாறே எமது தாயகப் பரப்பிலிருந்து ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேற்றப்படவேண்டும். ஜனநாயக வழியில் சர்வதேசச் சமூகத்திடம் நாம் விடுக்கும் இந்தக் கோரிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவேண்டும். - இப்படி அந்த பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளும்படி தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வெளிநாட்டு ராஜதந்திரிகள், உள்ளூர் மற்றும் சர்வதேச உடக வியலாளர்கள் உட்பட பல முக்கிய பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொங்கு தமிழ் நிகழ்வில் பல லட்சக் கணக்கான மக்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் -

அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதி உட்பட சகல ஏற்பாடுகளையும் நிகழ்வு ஒழுங்கமைப்புக் குழு மேற்கொண்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-9-7)

# தொண்டமானின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய 'பந்தா'வுடன் ஆறுமுகன் தொண்டமான் பல இடங்களுக்கும் சென்று வருவது ஏன் என்று இந்த நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பினார் மகேஸ்வரன்.

அதற்குப் பதிலளித்தபோதே யோகராஜன் மேற்படி தகவலை வெளியிட்டார்.

''எமது தலைவரின் உயிருக்கு ஆபத்து உள்ளது. அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கொட்டகலையில் உள்ள எமது கட்சி அலுவலகத்துக்குள் இருந்தே சந்தேகத்தில் இருவர் பிடிபட்டுள்ளனர். மேலும் சில இடங்களில் இப்படிச் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தலைவரைப் பாதுகாக்க வேண்டிய கடமை - பொறுப்பு - எமக்கு உண்டு. அதற்கான ஏற்பாடுகளைக் குறைகூறக் கூடாது.'' - என்றார் யோகராஜன்.

''அரசுத் தரப்பினால் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? அப்படியானால் யாரால் உங்கள் தலைவருக்கு உயிராபத்து? பிடிபட்டவர்கள்தமிழர்களா? அல்லது பெரும்பான்மையினத்தவர்களா?'' - என்ற சாரப்பட பதில் கேள்வி எழுப்பினார் 'மின்னல்' நிகழ்ச்சியை நடத்திய ரங்கா.

''யாரால் உயிராபத்து என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆனால், பிடிபட்டவர்கள் தமிழர்கள். தேவைப்படும் சமயத்தில் தமது எண்ணத்தை - நோக்கத்தை - நிறைவேற்றுவதற்காக அவர்கள் அங்கு நிலைநிறுத்தப்பட்டிருக்கலாம். '' - என்ற கருத் துப்படப் பதிலளித்தார் யோகராஜன். (எ-க)


## 03.09.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300540803 இலிருந்து 300558246 வரை

சீட்டிழுப்பு இல. 1638

வெற்றி எண்கள்

26 37 55 67 சுப்பர் எண் 04

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.54,59,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 54,59,650/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 473 | 1,000/- | 4,73,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,504 | 500/- | 7,52,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,385 | 40/- | 8,95,400/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,375 | 20/- | 4,27,500/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,18,637 | 10/- | 31,86,370/- |
| | | மொத்தம் | 78,69,270/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 83,69,270/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 63,11,350/-

தொடர் இல. 200581972 க்கு மேற்பட்ட ஜாதா நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 07 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

| | |
|---|---|
| திருகோணமலை | 300546399-3-14 |
| பதுளை | 300542965-8-63 |
| நுவரெலியா | 300543405-0-34 |
| கொழும்பு | 300558073-4-90 |
| காலி | 300546545-1-73 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# ஐ.நாவை ஈடுபடுத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டு வருகிறார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஐ.நாவில் முக்கிய பங்காற்றும் பல நாடுகளின் தலைவர்களோடு இந்த விவகாரம் தொடர்பாக தொலைபேசி மூலம் ஜனாதிபதி சந்திரிகா உரையாடியிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஆனாலும், ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த யோசனையை முற்றும் முழுதாக நிராகரிக்கத் தீர்மானித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இதற்கு ஆட்சேபனையைத் தெரிவிக்கவும் முடிவுசெய்துள்ளது.

ஐ.நா. அமைதிப் படையை இங்கு அழைப்பது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குமென்றும், இதனால்தான் ஐ.தே.க. அதனை விரும்பவில்லையென்றும் ஐ.தே.கவின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் ஒரு சமயம் ஐ.தே.கவின் முன்னாள் ஜனாதிபதிகளுள் ஒருவரான டி.பி.விஜயதுங்க, இதேபோன்ற முயற்சி ஒன்றை எடுத்தாரெனவும், ஆனால் கட்சிக்குள் பலர் இதனை எதிர்த்ததால் அது சாத்தியமற்றுப் போனதென்றும் அவர் நினைவு கூர்ந்தார்.

தற்போது கொழும்பு வந்துள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி பிரேஹ்மியை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கும்போது கட்சியின் இந்த நிலைப்பாட்டை அவர் நேரில் வெளியிடு வாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விவகாரத்துக்குள் ஐ.நா. அமைதிப்படையை இழுத்துவிடும் முயற்சியை அயல்நாடான இந்தியாவும் கடுமையாக எதிர்க்கும் என்றும் கூறப்படுகின்றது.

பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அயல் நாடான இந்தியா போன்றவற்றின் இணக்கமின்றி அடுத்த பத்து வாரகாலத்துக்குள் - தமது பதவிக்காலம் முடிவுறுவதற்குள் - ஜனாதிபதி சந்திரிகாவினால் இதுபோன்ற பெரியதொரு நிலைமாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியமானதல்ல; இலகுவானதல்ல - என்று வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கொலைச் சம்பவத்தை வைத்துக்கொண்டு - ஐ.நாவையும் பயன்படுத்தி - ஐரோப்பிய ஒன்றியம், கனடா போன்றவற்றி னால் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வைக்கும் கைங்கரியத்தில் ஜனாதிபதி வெற்றி பெறக் கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ-க)

# ஐ.நா. செயலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் பிரேஹ்மி அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை பல மட்டங்களிலும் நடத்தியுள்ளார்.

நாளை தம்மைச் சந்திக்கவிருக்கும் பிரேஹ்மியிடம், வடக்கு - கிழக்கு பகுதியில் ஏற்பட்டிருக்கும் அரசியல் கள நிலவரம், அதனால் சமாதான பேச்சுகளுக்கு ஏற்பட்டுவரும் தடங்கல்கள் என்பன குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விளக்குவர். (எ-க)

# மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழி கற்பதற்காகப் படையினர் சென்றுகொண்டிருந்த வாகனம் மீது சந்திவெளியில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதில்சிப்பாய் ஒருவர்காயமடைந்தார்.

வீதித் தடை நிலையத்தில் நின்றிருந்த படையினருக்கு சிற்றுண்டி எடுத்துச் சென்ற இராணுவ ஓட்டோ ஒன்றின் மீது சித்தாண்டியில் கிரனேட் வீச்சு மேற்கொள்ளப்பட்டது. அதில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். அவரது நிலை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இரு சிப்பாய்களும் உடனடியாக வாழைச்சேனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக்காக பொலன்நறுவை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். (எ-க)

# புலிகளின் அலுவலகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு இனந்தெரியாத ஆயுததாரிகள் புலிகளின் அலுவலகம் மீது முதலில் கிரனேட்டை வீசிவிட்டு சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். பின்னர் அலுவலகத்தின் உள்ளே நுழைந்து அங்கிருந்த தளபாடங்கள், ஆவணங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்றவேளை அலுவலகத்தில் நான்கு பேர் தங்கியிருந்தனர். எனினும், ஏனைய மூவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் அலுவலகத்தின் பின்கதவு வழியாக தப்பிச்சென்றனர் என்பதால் உயிரிழப்புக் குறைக்கப்பட்டது என்றும்தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்தனர். ஆனால், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுடன் சேர்ந்தி யங்கும் தேசவிரோதசக்திகளுமே இந்தத்தாக்குதலை நடத்தின என்று புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தாக்குதல் சம்பவத்தையடுத்து அங்கு சென்ற இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளும் பொலீஸாரும் விசாரணைகளை மேற்கொண்டனர். புலிகளின் களுவாஞ்சிக்குடி அரசியல் துறை பணிமனை இதற்கு முன்னரும் பல தடவைகள் தாக்குதலுக்கு இலக்காகி உள் ளது.

நேற்றைய தாக்குதல் சம்பவத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரிவு மிக வன்மையாகக் கண்டித்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும், இராணுவம், பொலீஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் மீதும் பரவலான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுவரு கின்றன.

கடந்த ஆறு தினங்களில் பதினொரு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்வங்களின்போது இரண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர்; மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். நான்கு இராணுவத்தினரும், ஒரு பொலீஸ் உத்தியோகத்தரும் காயமடைந்துள்ளனர். (எ-க-9-12)

# மரண அறிவித்தல்கள்

## பெரியதம்பி கனகசபாபதி

**(ஓய்வுபெற்ற செயலாளர், வல்வெட்டித்துறை நகரசபை )**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அல்வாயை வசிப்பிடமாகவும் தற்போது நீர்வேலியில் வசித்தவருமாகிய பெரியதம்பி கனகசபாபதி நேற்று (04.09.2005)ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பிறேமளாவின் தந்தையும் இரத்தினசபாபதி, அமிர்தலிங்கம் ஆகியோரின் சகோதரரும் வைத்திலிங்கத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.09.2005) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சீயாக்கடவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (39643) (25-34-12)
தகவல்: மனைவி.

## திருமதி பாக்கியம் நடராசா



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் நடராசா அவர்கள் நேற்று (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.09.2005) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராமகிருஷ்ண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (39641) (25-34-12)
தகவல்: **கனகலிங்கம்(மகன்).**

## கிருஷ்ணபிள்ளை இலங்கநாதன் (சமரக்கொடி)

கொக்குவில் மேற்கு,காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை இலங்கநாதன் நேற்று(04.09.2005)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் ஜெகதீஸ்வரன், ஜெயக்குமார்(யாழ்.மாநகரசபை), ஜெயந்தி(சுவிஸ்),சுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.09.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39642) (25-34-12)
63/4,கொண்டலடி வீதி, நல்லூர்.
தகவல்: **குடும்பத்தினர்.**

## திருமதி மகேஸ்வரி மூத்ததம்பி

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மூத்ததம்பி அவர்கள் 03.09.2005 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் மூத்ததம்பி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், கனகநாயகி, சற்குணநாயகி, புவனேஸ்வரி, டாக்டர் இராஜநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சோதிரட்ணம் (**Malaysia**), பொன்னம்மா (**Canada**), இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான நடராஜா சிவமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிர்மலானந்தன் (**Qatar**), சுமதி, சதானந்தன் (**Norway**), ஹேமவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், லக்ஷ்மி, உதயகுமார், பாலமீரா, பாலமுரளி ஆகியோரின் அன்பு மாமியாரும் லக்ஷிகா, ஷகானா, ஸ்ருதி, ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2005) திங்கட்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையிலும், 07.09.2005 புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் (ஹேம வாசா, 8 ஆம் கட்டை, தெல்லிப்பழை) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 08.09.2005 வியாழக்கிழமை காலை இறுதிக் கிரியைகளின் பின்னர் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**22-6/4, Moor Road,**
**Colombo - 6.**
**Tel: 077 2744943** (சி-45035) (25-34-12)
தகவல்: **மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org